பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading
வெலா சலூன்
Hair Dressing
Ladies & Gents
இல.8, நவீன சந்தை, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

விழியம் 01 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 21, திங்கட்கிழமை 03.04.2017 கதிர் 149

# தமிழர் – முஸ்லிம்கள் இணைந்து நில விடுவிப்புப் போராட்டம்





## நேரம் வந்துவிட்டது என அழைக்கின்றார் மாவை

மன்னார், ஏப்ரல் 03

தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது நிலங்களை விடுவிப்பதற்காகப் பெரிய போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது. அதற்கு நாம் தயாராக வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா.

பக்கம் 18 >>>

## திருமலை சீனக்குடாவில் 99 எண்ணெய்த் தாங்கிகளும் இந்திய நிறுவனத்திடமாம்!

திருகோணமலை, ஏப்ரல் 03

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள – இலங்கை அரசாங்கத்துக்கு சொந்தமான – அனைத்து எண்ணெய்த் தாங்கிகளையும் – மொத்தம் 99 தாங்கிகளையும் – இந்தியப் பெற்றோலிய நிறுவனம் பயன்படுத்தவுள்ளதாகக் கனிய எண்ணெய்த் தொழிற்சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (விவரமான செய்தி 7 ஆம் பக்கத்தில்)

## வட - கிழக்கில் மீள்குடியேற்ற அமைச்சின் பணிகள் குறித்து சம்பந்தன் கடும் அதிருப்தி



திருகோணமலை, ஏப்.03

வடக்கு – கிழக்கில் யுத்தத்தால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்குப் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் குற்றம் சுமத்தியுள்ளார்.

வீடுகள் இல்லாத மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின்

பக்கம் 18 >>>

## பொன்னாலையில் கடற்படை சூறையாடுகிறது குடிதண்ணீரை

### நேரில் பார்த்தார் சரா எம்.பி.



பொன்னாலை, ஏப்.03

பொன்னாலைக்கு நேற்றுச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அங்குள்ள நன்னீரைக் கடற்படையினர் பெருமளவில் அள்ளிச் செல்வது தொடர்பாக அவதானிப்புக்களில் ஈடுபட்டார்.

சுழிபுரம் – சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாம், விகாரை மற்றும் அங்குள்ள ஹோட்டல் என்பவற்றுக்கு

பக்கம் 18 >>>



## நில விடுவிப்புக்கு உறுதி அளிக்கப்பட்டாலும் கேப்பாபிலவு மக்களின் போராட்டம் தொடரும்

முல்லைத்தீவு, ஏப்.03

எங்களது காணிக்குள் அடியெடுத்து வைக்கும் வரை எமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று கேப்பாபிலவில் 32ஆவது நாளாகப் போராட்டம் நடத்தி வரும் மக்கள் தெரிவித்தனர்.

279 ஏக்கர் காணிகள் மே 15ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படுமென அரசு அறிவித்துள்ளதை நம்பி நாங்கள் எமது போராட்டத்தைக் கைவிடப்

பக்கம் 18 >>>

## வவுனியாவில் போராட்டக்காரர்களை சந்தித்தார் சுகாதார அமைச்சர் ராஜித



வவுனியா, ஏப். 03

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்ட இடத்திற்கு மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தின உட்படப் பலர் நேற்று வருகைதந்து கலந்துரையாடியுள்ளனர்.

பக்கம் 18 >>>

## கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது!

கிளிநொச்சி, ஏப்.03

கிளிநொச்சி – முழங்காவில் பகுதியில் 8.275 கிலோ கேரளக் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இந்தச் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கேரளக் கஞ்சா குறித்த விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (உ)



தீர்வைத் தராமல் சும்மா வந்து குந்தி இருந்து பேசி பயனில்லை பாருங்கோ...!

# மக்களின் உடனடிப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு முதலமைச்சர் விக்கி கடிதம்

வடக்கில் உள்ள மக்கள் எதிர்நோக்கியுள்ள மனிதாபிமான நெருக்கடிகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வலியுறுத்தி, வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

வடமாகாணத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் உள்ள பிரதிநிதிகளும் திருகோணமலை மாவட்டப்பிரதிநிதிகளும் தங்களுடைய அன்புக்குரியவர்கள் காணமற்போனமை பற்றி சென்றவாரம் என்னைச் சந்தித்துப் பேசினார்கள். அதேபோல தங்களுடைய காணிகளைவிடுவிப்பதுபற்றி இடம்பெயர்ந்துவாழ்வோர் என்னுடன் தொடர்புகொண்டார்கள். மேலும் வேலையற்றபட்டதாரிகளும் சந்தித்துப் பேசினார்கள். அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவீர்கள் என்றநம்பிக்கையில் இவற்றைமுன்வைக்கின்றேன்.

**காணாமற்போனவர்கள்**

காணாமற்போனவர்களின் தொடர்ச்சியானபோராட்டம் கிளிநொச்சியில் 49 நாள்களும், வவுனியாவில் 38 நாள்களும், முல்லைத்தீவில் 26 நாள்களும், வடமராட்சியில் 19நாட்களும், திருகோணமலையில் 29 நாள்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவர்களில் பலரும் அறுபது வயதிற்குமேற்பட்டவர்கள். அவர்கள் நோயாளிகள். வெய்யிலிலும் குளிரிலும் இரவு-பகலாகத் தற்காலிகக் கொட்டகைகளில் இருந்தவாறு போராடுகின்றார்கள். அவர்கள் தங்களுடைய உறவுகள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது இறந்துவிட்டார்களா என அறிய விரும்புகின்றார்கள்.

பிரதம மந்திரி உட்படப் பலரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். இறந்திருக்கக் கூடும் எனப் பிரதம மந்திரி தெரிவிக்கின்றார். ஆனால், அவர்கள் கைதுசெய்யப்பட்டு பலவருடங்களின் பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆதாரமாகக் காட்டி அவர்கள் இன்னமும் உயிருடன் இருக்கின்றார்கள் எனக் கூறுகின்றார்கள்.

உதாரணமாகத் தேர்தல் காலத்தில் எடுத்தபடம் ஒன்றில் தங்களுக்குமுன்னால் இடதுபக்கத்தில் தனதுமகள் இருக்கிறாள் என ஒருதாய் காட்டுகின்றார். அவருடைய பெயர் ஜெயவதனா. இன்னும் இருவர் அடையாளம் காட்டப்பட்டனர். இவர்களைக் கண்டு பிடிப்பது தங்களுக்குக் கஷ்டமாக இருக்காது. இது போலப் பலசான்றுகள் கைவசம் வைத்திருக்கின்றார்கள். எனவே குறைந்தளவிற்கு இவர்களுக்காக பின்வருவனவற்றையாவது தங்களால் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

★ காணாமற்போனோர் தொடர்பான 'பரணகம' அறிக்கையை இதுவரை வெளியிடாவிட்டால் வெளியிடல்.

★ காணாமற் போனவர்களில் பத்திரிகைகளில் இனங்காட்டப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைக்கு உத்தரவிடல்.

★ நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தாது இதுவரை தடுத்து வைக்கப்பட்டவர்களின் விவரத்தை வெளியிடல்.

★ தமது அன்புக்குரியவர்கள் அடையாளங்காணப்பட்டால் அவர்கள் அதன் பின்பு காணமற்செய்யப்படக்கூடும் என்ற பயம் உறவினர்களிடம் உண்டு. அதனைத் தாங்கள் கண்காணிப்பீர்கள் என நம்புகின்றேன்.

★ காணாமற்போனவர்களுக்கான அலுவலகத்தை உடன் இயங்கச் செய்தல்.

★ காணாமற்போனோர் என உறுதிப்படுத்தப்பட்ட பின்பு பொருத்தமானசான்றிதழ்களை வழங்கல்.

**காணிகளைவிடுவித்தல்**

காணிகள் யுத்தத்தின் பின் எட்டுவருடங்களாகியும் விடுவிக்கப்படவில்லை. இராணுவத்தினருடைய பிரசன்னம் இனியும் தேவையற்றபடியால் அவர்கள் வசமுள்ள காணிகளைவிடுவிக்கலாம். புலனாய்வு வேலைகளைப் பொலிஸார் மேற்கொள்ள முடியும். மிகுதியாக மயிலிட்டியிலுள்ள யுத்த தளபாடங்களைமுன்னர்ஒருமுறை செய்ததுபோல் அழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இவை தொடர்பாகப் பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

★இராணுவத்தினர்வசமுள்ள காணிகளின் விவரங்களை வெளியிடல்.

★ மக்கள் செறிந்துவாழும் இடங்களிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றல்.

★ சிங்கள மக்களின் இடங்களில் அவர்களை வைத்திருப்பின் அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். ஏனெனில், அவர்கள் அவர்களின் உறவினர்கள். ஆனால், தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன.

காட்டுப்பகுதிகளில்பல்வேறு நடவடிக்கைகள் நடாத்தப்படுகின்றன என கூகிள் வரைபடங்கள் மூலம் அறியவருகின்றது. பெறுமதிமிக்க மரங்கள் கடத்தப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எங்களுடைய வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இராணுவ முகாம்கள்அருகில் இருப்பதால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

**வேலையற்றபட்டதாரிகள்**

வேலையற்ற பட்டதாரிகள் ஒரு மாதத்திற்கும் மேலாகத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**வேலையற்ற பட்டதாரிகள்** தொடர்பாகப்பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

★ வடக்குகிழக்கிலுள்ள மத்திய அரசாங்க, மாகாண அரசாங்க வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கைகள் எடுத்தல்.

★ பொலிஸாரின் ASP தரத்தில் நியமனங்களை விரும்புகின்ற பட்டதாரிகளுக்கு அப்பதவிகளை வழங்கஉதவுதல்.

★ இதேபோன்று வேறு அரச நிறுவனங்களிலும் வேலைகள் வழங்கநடவடிக்கைகளெடுத்தல் வேண்டும்.

★ தனியார்துறையில்பொருத்தமானவேலைகளைவழங்கல்.

★ சுற்றுலாத்துறையில் இவர்களுக்கு வேலைகளை வழங்க நடவடிக்கையெடுத்தல்.

இவை யாவற்றையும் தங்கள் கவனிப்பிற்குக் கொண்டு வரும் அதேநேரம் விரைவில் அவர்கள் சார்பாக நடவடிக்கைகளை எடுக்க முன்வருவீர்கள் என எதிர்பார்க்கின்றேன். - எனத் தெரிவித்துள்ளார்.

# வவுனியா கடற்படை முகாமில் கடற்படை அதிகாரி உயிரிழப்பு!

வவுனியா, ஏப்.03

வவுனியா - பூனாவ கடற்படை முகாம் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த அவர் கீழே விழுந்து பாதிக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

அதையடுத்துக் கடற்படையினரால் வவுனியா வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட அவர் அங்கு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் 37 வயதான இளம் அதிகாரி எனவும் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று மதியம் வரை வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மதவாச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# எஸ்போஸின் நூல் வெளியீடு





கிளிநொச்சி, ஏப்.03

படுகொலை செய்யப்பட்ட சந்திரபோஸ் சுதாகர் என்ற எஸ்போஸின் படைப்புக்கள் தொடர்பான நூல் வெளியீடு நேற்று கிளிநொச்சி பழைய வைத்திய சாலைமண்டபத்தில், எழுத்தாளரும்அதிபருமானபெ.கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதல் பிரதியை யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வெளியிட்டு வைக்க, எஸ்போஸின் தாயார் பெற்றுக்கொண்டார். பின்னர், ஓய்வுபெற்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் நூலின் பிரதிகளை வெளியிட்டு வைத்தார்.

எஸ்போஸ் பற்றியும் அவரது படைப்புக்கள் மற்றும் அவரின் செயற்பாடுகள் தொடர்பாக பொன்.காந்தன், அநாமிகன், தட்ட கிஸ்காட், திருநகர் ஜெகா, நிரஞ்சலன், ஊடகவியலாளர் கிருஸ்ணகுமார், ஆசிரியர் தயாளன், கிருசாந்தன் ஆகியோர் உரையாற்றினர். (ம-70)

# விசேட தேவையுடையோரின் புனர்வாழ்வுக்கு மத்திய சுகாதார அமைச்சு நிதி வழங்கும்

## வவுனியாவில் சுகாதார அமைச்சர் ராஜித உறுதிமொழி

வவுனியா, ஏப்.03

வடக்குமாகாணத்தில் உள்ள விசேட தேவையுடையோருக்கான புனர்வாழ்வுச் செயற்றிட்டத்திற்கு நிதியுதவி செய்வதற்கு மத்திய சுகாதார அமைச்சு தயாராக உள்ளது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

வவுனியா பொது வைத்திய சாலையில் அமைக்கப்பட்ட இரத்த வங்கித் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு, அதைத் திறந்துவைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படிக்கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் உரையாற்றுகையில் –

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

மத்திய சுகாதார அமைச்சரின் உதவியினால் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.



மேலும், நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் விசேட சிகிச்சைப் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன எனவும் சத்தியலிங்கம் கூறினார்.

போர் காரணமாக வடக்கில் 45 ஆயிரத்திற்கும் அதிகமானோர் விசேட தேவையுடையவர்களாக்கப்பட்டுள்ளனர்எனமதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பான உண்மைத் தரவுகள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் சேகரிக்கப்பட்டு கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்களின் புனர்வாழ்வுச் செயற்றிட்டத்திற்கு நிதிபெரும்பிரச்சினையாகவுள்ளது. – என்றார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றிய மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ண, விசேட தேவைக்குட்பட்டவர்களின் புள்ளிவிவரங்களுடன் திட்ட முன்மொழிவை சமர்ப்பிக்குமிடத்து மத்திய அமைச்சு மாகாண சுகாதார அமைச்சுக்கு நிதியுதவி வழங்க தயாராகவுள்ளது. – என்றார்.

இதேவேளை, நெதர்லாந்து அரசின் நிதி உதவியுடன் வடக்கில் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் முல்லைத்தீவு மற்றும் மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புனர்வாழ்வு வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

## கால அவகாசமும் நீடிப்பும்

கால அவகாசமும் அதை நீடிப்பதுமே இலங்கை அரசியலில் இப்போது பிரதான பேசு பொருளாக இருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தானும் இணை அனுசரணை வழங்கி, சர்வதேச சமூகத்துடன் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு முதலில் பதினெட்டு மாத கால அவகாசம் வழங்கப் பட்டது. அது பலனின்றி - பயனின்றி - முடிவடைந்த நிலையில் மேலும் இரண்டு வருட கால அவகாசம் இப்போது நீடித்து வழங்கப் பட்டிருக்கின்றது.

அந்தக் கால அவகாசத்திலும் ஏதேனும் விடயங்கள் உருப்படியாக ஒப்பேறுமாற்போல் தெரியவில்லை.

சர்வதேச மட்டத்தில் - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தரத்தில் - வாக்குறுதி அளித்துப் பெற்ற கால அவகாசத்துக்குள் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விட்ட - அல்லது செய்யத் தவறிய - நல்லாட்சி அரசு, உள்நாட்டிலும் அதே தவறை இழைத்து வருகிறது.

2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சித் தரப்பு மாறியது. அதையடுத்து, ஐ.தே.க. - சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசு அதிகார பீடத்துக்கு வந்ததாயினும், இந்த இரண்டு தரப்புகளும் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்தித்த பின்னர் ஒன்றிணைந்து தற்போதைய நல்லாட்சி அரசை ஸ்தாபித்தமை 2015 ஒகஸ்ட் பிற்பகுதியில் நடைபெற்றது.

புதிய நல்லாட்சி அரசை முதலில் இரண்டு வருடங்கள் முன்னெடுப்பதாக அப்போது இருதரப்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் கால கட்டத்துக்குள் சில, பல முக்கிய விடயங்களைச் செய்து முடிப்பதற்கும் அச்சமயம் தீர்மானிக்கப்பட்டது. அதாவது, சில விவகாரங்களை ஒப்பேற்றுவதற்கான கால அவகாசமாக அந்த இரண்டு வருடங்கள் அப்போது முடிவு செய்யப்பட்டது.

+ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியை அகற்றி, நாடாளுமன்றுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையை மீண்டும் ஏற்படுத்துதல்.

+ தேர்தல் முறைமைகளை மாற்றி, தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுத்தல்.

+ இனப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நிலைத்து நீடிக்கத்தக்கதும், சகல தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமான ஒரு தீர்வைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்தல்.

- இந்த மூன்று விடயங்களுக்கும் இடமளிக்கக் கூடிய வகையில் அரசமைப்பைச் சீர்திருத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அளிக்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் வருகின்ற செப்ரெம்பருடன் முடிந்துவிடும். ஆனால், தீர்மானிக்கப்பட்ட இந்த விடயங்களில் எதுவுமே நடந்தபாடாகத் தெரியவேயில்லை.

இந்த விவகாரங்களை ஒட்டி பல கட்டங்களில் பேச்சுகள் - கலந்துரையாடல்கள் - ஆய்வுகள் - முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பல கூட்டங்கள் கூட நடந்துள்ளன. ஆனால், இறுக்கமான - இறுதியான - தீர்மானங்கள் எவையுமே இன்னும் முன்னெடுக்கப்படவில்லை அல்லது எட்டப்படவில்லை.

நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சிகள் தமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஏதாவது செய்யப்படுமா - உருப்படியாக ஏதும் நடக்குமா - என்பது பெரும்பாலும் சந்தேகம்தான்.

அரசு, அதிகாரம், பதவி என்ற சுவைகளை ருசித்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் - குறிப்பாக அரசுத் தரப்பு அரசியல்வாதிகள் - இந்த இரண்டு வருட ஒப்பந்தம் காலாவதியாகி செயலிழந்து போவதை அனுமதிக்கமாட்டார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நல்லாட்சி அரசின் விருப்புக்கு ஏற்ப கால நீடிப்பு வழங்கப்பட்டமை போல - இப்போதும் நல்லாட்சி அரசுத் தரப்பினரின் விருப்புக்கு ஏற்ப இந்த இரண்டு வருட கால அவகாசம் மேலும் நீடித்து வழங்கப்படலாம் என எதிர்பார்க்கலாம்.

"ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" - என்பார்கள். அது போன்றதாகவே இருக்கின்றது நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சிகளின் கருத்தும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றுங்கள் என்றால் அது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான சுதந்திரக் கட்சியினருக்கு ஏற்புடையதாக இல்லை.

தேர்தல் முறைமையை மாற்றுவதென்றால் அது சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளுக்கு சிரமத்தைக் கொண்டுவருகின்றது. பிரதான அரசுத் தரப்பான ஐ.தே.கட்சிக்கு அதில் அதிக ஈடுபாடும் இல்லை; கவலையும் கூட இல்லை.

'இனப் பிரச்சினைக்குத் தீர்வு' என்றால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், பிற தமிழ்க் கட்சிகளும் அதற்கான திட்டம் தமக்கு ஏற்புடையதாயின் அதனை வரவேற்கும். ஆனால், கூட்டு எதிரணியும் வேறு சில உதிரிக் கட்சிகளும் அத்திட்டத்தை எதிர்க்கவே செய்யும்.

இப்படி இடியப்பச் சிக்கலாக இருக்கும். நாடாளுமன்றத்தை ஒழுங்குக்குக் கொண்டுவந்து செயற்படுத்துவதற்குக் கால அவகாசம் என்ற 'தாஜா'வைக் கையில் எடுப்பதைத் தவிர, வேறு மார்க்கம் இருப்பதாகப்படவில்லை.

ஆகவே, 'நல்லாட்சி' அரசு நல்லவை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசமும் நீடிக்கப்படும். அதனால், 2016 இல் தீர்வு என்ற சம்பந்தன் ஐயாவின் திட்டமும் இன்னும் இழுபடும். அது தவிர்க்க முடியாததே...!

## இலங்கை-இந்திய இடையிலான அபிவிருத்தி குறித்த ஒப்பந்தம் தயார்

பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அபிவிருத்திப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தயார் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகம் தொடர்பான ஒப்பந்தங்களே இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, அங்கு பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு உள்ளிட்ட தொழிற்சாலைகள் உருவாக்கப்படவுள்ளன.

மேலும், கொழும்புத் துறைமுகத்தில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்யவும் இடமளிக்கப்படும் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்த உடன்படிக்கை வெகு விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யானைக்குட்டியை நியூஸிலாந்துக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, ஏப்.03

இலங்கையிலிருந்து யானைக் குட்டி ஒன்றை நியூஸிலாந்துக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த யானைக் குட்டியை அதன் குடும்பத்தில் இருந்து பிரிப்பது கொடூரமான செயல் என்று கூறி சுற்றாடல் ஆர்வலர்கள் அதனைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கை மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்த யானைக்குட்டி அன்பளிப்பாக வழங்கப்பட இருந்தது.

கடந்த வருடம் இலங்கை வந்த அப்போதைய நியூஸிலாந்துப் பிரதமர் ஜோன் கீயிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இதற்கமைய 4 வயதான யானைக்குட்டியை நியூஸிலாந்துக்குக் கொண்டு செல்ல ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக ஒக்லாந்து பூங்காவுக்கு யானைக் குட்டியைக் கொண்டு செல்வதற்காக நியூஸிலாந்து மிருக வைத்தியர்கள், கடந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

எனினும் இலங்கை யானைக் குட்டியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு எதிராகச் சுற்றாடல் ஆர்வலர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அதற்கமைய யானைக் குட்டியை வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்த சகல நடவடிக்கைகளும் நிறைவுக்கு

### அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவிப்பு

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் சீன நிறுவனத்துடன் அரசு ஏற்படுத்திக் கொள்ளவுள்ள உடன்படிக்கையின் சகல நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. சீன நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து அரசின் பொருளாதார விசேட குழு ஜனாதிபதியுடன் இறுதியாகக் கலந்துரையாடவுள்ளதாகப் பொது முயற்சியாண்மை அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 80 இற்கு 20 என்ற உரிமை அடிப்படையில் சீன நிறுவனத்துக்குக் கொடுத்தாலும், எதிர்வரும் 10 ஆண்டுகளின் பின்னர் அரசுக்குள்ள 20 வீத உரிமையை 40 ஆக மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியுடனான பேச்சின் பின்னர், இந்தத் திட்டம் தொடர்பில் அமைச்சரவை அனுமதிக்கு விடப்படும். பின்னர் 10 நாள்களுக்குள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

இந்தத் துறைமுகத்தின் நடவடிக்கைகள் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அதற்கான பெறுமதியை அடைக்க முடியுமாக இருக்கும்.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை கைச்சாத்திட முன்னர் அது தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு மக்கள் விடுதலை முன்னணி உட்பட கூட்டு எதிர்க்கட்சியினர் சபாநாயகரைக் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## டெங்கு ஒழிப்புக்கு திறைசேரி ஒதுக்கிய நிதி செலவிடப்படாமைக்கான காரணம் என்ன?

### தகவல் வெளியிடுமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை

கண்டி, ஏப்.03

டெங்கு ஒழிப்புக்காகத் திறைசேரி ஒதுக்கியுள்ள நிதி, செலவிடப்படாமை தொடர்பில் சுகாதார அமைச்சர் தகவல் வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரதான செயலாளர் புபுது ஜயகொட இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, திறைசேரியின் ஊடாக வேறு துறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

அவ்வாறெனில் என்றால் டெங்கு ஒழிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு, செலவு செய்த நிதி எவ்வளவு, மிகுதித் தொகைக்கு என்ன நடந்தது? என்பது குறித்து சுகாதார அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார்.



வீதி விபத்துக்களை தவிர்ப்போம்!

பாதசாரிக் கடவையில் வீதியைக் கடவுங்கள். அதில் கடக்கும் போதும் கவனமாகக் கடவுங்கள். பாதசாரிக் கடவை மட்டும் உங்களைப் பாதுகாக்காது. உங்கள் கவனமும் மிகவும் அவசியம்.

விலை மதிக்க முடியாத உயிர்களைக் காப்போம்!!

## நாளை

04.04.2017
செவ்வாய்க்கிழமை

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஐ.தே.க. – சு.க. இடையில் உடன்படிக்கை

## கைச்சாத்திடுவது தொடர்பில் ஆராயப்படுகிறது

கொழும்பு, ஏப்.03

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான உள்ளூராட்சி மன்றங்களில் சுதந்திரக் கட்சியின் ஆதரவை வழங்கவும், சுதந்திரக் கட்சிக்கு சாதகமான உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை வழங்கவும் இணங்கும் வகையில் இந்த உடன்படிக்கை அமைய வுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே சில சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் நல்லாட்சி அரசால் கைப்பற்ற முடியும் என்று அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்குவினரவில் தெளிவுபடுத்தவுள்ளனர்.

உத்தேச திட்டத்துக்கு அமைய இரண்டு கட்சிகளிலும் மிகவும் பிரபல்யமானவர்களை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களாக தெரிவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் அரசுக்குக் கிடைக்கப் பெறுவதன் மூலம் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை சாத்தியமாக மேற்கொள்ள முடியும் என்று பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# 16 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் கடத்திய 6 இந்தியர்கள் கைது!



இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயின் கடத்திய 6 இந்தியர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன் துறை கடற்பரப்புக்கும் பருத்தித்துறை கடற்பகுதிக்கும் இடையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 13 கிலோ 500 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட ஹெரோயின் பெறுமதி 10 கோடி 20 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த இந்தியர்களிடமிருந்து ஒரு நாட்டுப் படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தியர்கள் கடற்படையினரால், காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் 13 பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஏப்.03

13 பொலிஸ் அதிகாரிகள் லஞ்ச ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழுவில் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் நேற்று அமுலாகும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

3 பெண் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 13 பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு லஞ்ச ஊழல் குற்றவிசாரணை ஆணைக்குழுவில் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் தற்போது ஆணைக்குழுவுக்கு சேவைக்கு வந்துள்ளனர் என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதன்படி அவர்கள் ஊழல் குற்ற விசாரணைக்கான பணியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும்

லஞ்ச ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்காக 431 அதிகாரிகள் இருக்க வேண்டும் என்ற போதிலும் தற்போது 190 அதிகாரிகளே சேவையில் இருக்கின்றனர் எனவும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது. (ஐ)

# ஓய்வு பெறவுள்ள அரச அதிகாரிகளுக்கு தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரம்

அடுத்த வருடம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்களில் பணிபுரியும் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நன்மை பயக்கும் வகையில், தீர்வைவரியற்ற வாகன அனுமதிப் பத்திரத்தின் பெறுமதியை அதிகரிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரத்துக்கு மேலதிகமாக, ஓய்வு பெறும் போதும் தற்பொழுது பயன்படுத்தும் வாகனத்தை குறைந்த விலை கொடுத்து எடுத்துச் செல்ல முடியும் என்ற சட்டத்தின் அடிப்படையில், தற்பொழுது பயன்படுத்தும் வாகனம் பழையது என பலர், 80– 90 லட்சங்கள் பெறுமதி வாய்ந்த வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது அமைச்சின் செயலாளர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் 90 வீதமானவர்கள் அடுத்த வருட இறுதியில் ஓய்வுபெறவுள்ளனர் என்றும் அமைச்சின் அதிகாரி கூறியுள்ளார்.

அமைச்சின் செயலாளர்கள், பிரதம நீதியரசர் உட்பட நீதிபதிகள், பணிப்பாளர் நாயகமாகவுள்ளவர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், பணிப்பாளர்கள் உட்பட அரசின் நிறைவேற்று சபை அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த தீர்வை வரி அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறவுள்ளது என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஜப்பானின் கடற்பாதுகாப்பு படையணியின் 'டெரசுக்கி' கப்பல் கொழும்புக்கு வருகை

கொழும்பு, ஏப்.03

ஜப்பானின் தன்னியக்க பாதுகாப்பு கடற்பாதுகாப்பு படையணிக்கு சொந்தமான 'டெரசுக்கி' கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

தொழில்நுட்பமான அனுபவங்களை பரிமாறிக் கொள்ளல் மற்றும் இரு நாட்டு நற்புறவை வலுப்படுத்தும் நோக்கில் கடற்படை பயிற்சிகள் சிலவற்றில் ஈடுபடும் நோக்கில் இந்தக் கப்பல் இலங்கை வந்துள்ளது.

இதனை முன்னிட்டு, ஆறாவது பாதுகாப்பு பிரிவின் கட்டளைத் தளபதி, "டெரசுக்கி" கப்பலின் கட்டளைத் தளபதி மற்றும் ரியர் அட்மிரல் நிராஜ் ஆட்டிகல ஆகியோருக்கு இடையில் இருதரப்பின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

ஜப்பானின் தன்னியக்க பாதுகாப்பு படைப் பிரிவுக்குச் சொந்தமான 6 கப்பல்கள் கடந்த வருடம் இலங்கைக்கு வந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் இலங்கை வந்த "டெரசுக்கி" கப்பல் இரண்டு நாள்கள் இங்கு தங்கியிருந்து பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)



# புதிய அரசமைப்புக்கு மக்கள் வாக்கெடுப்பு நூறு வீத வெற்றி தரும்!



புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்து வாக்கெடுப்பு நல்லாட்சி அரசுக்கு சவாலான திருப்பமாக இருக்கும். எனினும் அது நூறு வீதம் வெற்றி பெறக் கூடிய ஓர் இலக்காகும்.

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்துக் கணிப்பு பிரெக்சிட் போன்ற சர்வதேச நிகழ்வுகளால் பிழையான பார்வைக்கு இட்டுச் சென்றிருந்தாலும் புதிய அரசமைப்பு மக்களுக்கு எவ்வாறு உதவும் என்பதை மக்கள் நன்கு அறிந்திருந்தால் அந்த அரசமைப்பு நிறைவேற்றம் தொடர்பில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் ஊடகமொன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

# வடக்கில் அமையவுள்ளன 44 மாதிரிக் கிராமங்கள்

வட மாகாணத்தில் 44 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்தக் கிராமங்களில் 2 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக 12 கோடி 67 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப்படுத்தும் அனைவருக்கும் 'நிழல்' என்ற வேலைத் திட்டத்தின் கீழ் இது அமுல்படுத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படும்.

நாட்டில் நிலவிய மோதல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களின் நலன் கருதி இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது – என்றார். (ஐ)

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்து வீடுகளைத் திணிக்கும் போக்கு!

கொழும்பு, ஏப்.03

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 6 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு, அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழு பச்சைக் கொடி காட்டியுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அமைச்சரவை அதற்கான பொறுப்பை, ஆர்சிலோ மிற்றல் நிறுவனத்திடம் வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2015 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் அரசால் முன்வைக்கப்பட்டபோது, சிவில் அமைப்புகள் பலவும் அதனை நிராகரித்திருந்தன; கண்டித்தன. தங்களது கலாசாரத்துக்கு அது பொருத்தம் அற்றது என்றும் வீடுகளை இழந்தவர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்தத் திட்டத்தை அடியோடு எதிர்த்தனர்.

இப்போது விசேட திட்டங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் சரத் அமுனுகமவிடம் ஜனாதிபதி இந்தப் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்.

இப்போது பெரும் விவகாரமாக மாறியுள்ள பொருத்து வீட்டுத்திட்டம் இதில் சம்பந்தப்பட்டவர்களின், வீடுகளை இழந்தவர்களின் நிலைமையை மேன்மேலும் கிணற்றில் இருந்து ஆழ் கடலுக்குள் தள்ளி விடும் நிலைக்கு மாறப் பட்டு திக்கற்ற ஏதிலிகளாக அல்லாட வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் தெரிந்த தரப்புகள் கண்டிக்கின்றன. (அ)

# மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் ஜெனீவா உபதேசம் செய்யத் தேவையில்லை!

## திருமலையில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் காட்டம்



திருகோணமலை,ஏப்.03

ஜெனீவாவோ, வெளிநாடுகளில் உள்ளவர்களோ மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில், எமக்கு உபதேசம் செய்யத் தேவையில்லை. இது எமது நாடு. இங்குள்ள மக்களை அவர்களின் உரிமைகளுடன் எவ்வாறு வாழ வைக்க வேண்டும் என்று எமக்குத் தெரியும். அதனை நாம் நடைமுறைப் படுத்தியும் வருகின்றோம்.

-இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

திருகோணமலை கப்பல்துறை எக்கமுதுகம வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க எமது அரசு சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு கொண்டே இருக்கின்றது. இந்த நிலையில், எமது நாட்டுக்கு ஜெனீவா போன்ற அமைப்புக்களின் அழுத்தங்கள் ஏற்படும் பட்சத்தில் அவை எமது நாட்டில் வாழ்கின்ற தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இன மக்களுக்கு வெளிநாடுகள் அளிக்கின்ற நிந்தனையாகவே இருக்கும்.

நாம் எக்கமுதுகம வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இது மனிதர்களின் அடிப்படைத் தேவையாகும். அவர்களின் உரிமைகளில் ஒன்றே நிம்மதியாக ஓர் இடத்தில் வாழ்வது. இந்த உரிமையை நாம் நிறைவேற்றி இருக்கின்றோம். காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் வீடு அமைப்பதற்கான நிதியை வழங்குகின்றோம். அதன் பின் வீதி, குடிதண்ணீர், மின்சாரம் போன்ற அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யவுள்ளோம். எனவே, எமது நாடு மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான சகல விதத்திலும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

30 வருடங்களாக யுத்தம் எமது நாட்டில் இடம்பெற்றுள்ளது. இந்த யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்கள் பலவற்றை இழந்துள்ளனர். அவர்களுக்கு பல உரிமைகள் உள்ளன. அவர்கள் மீளக்குடியமர்கின்ற உரிமை, வாழ்கின்ற உரிமை, தமது சமய கலாசாரத்தைப் பின்பற்றுகின்ற உரிமை என அனைத்தும் தற்போது வழங்கப்படுகின்றன.

அதேவேளை, இந்த நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்த சுதந்திர வீரர்களை நாம் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது. அவர்கள் எமக்காக ஆற்றிய சேவைகள், தியாகங்களை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே தான் இந்நாட்டில் தற்போதுள்ள அரசு எமது மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், எமது வீரர்களைப் பாதுகாப்பதிலும் முன்னின்று செயற்பட்டு வருகின்றது.- என்றார். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 150 ஓட்டிசம் நோயாளர்கள்!



மட்டக்களப்பு,ஏப்.03

மட்டக்களப்பு மாவட்டத்தில் 150 ஓட்டிசம் (தற்சிந்தனையாளர்) நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன், நாட்டில் பிறக்கும் 90 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் நோய் உள்ளது என வாழைச்சேனை வைத்தியசாலை சிரேஷ்ட உளநல மருத்துவ நிபுணர் ரமேஷ் ஜெயக்குமார் தெரிவித்தார்.

சர்வதேச ஓட்டிசம் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு ஓட்டிசம் நோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு மட்டக்களப்பு அருட்சகோதரர்கள் இல்லத்தில், மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்து, அவர்களுக்கான கல்வியூட்டலை மேற்கொள்ள வேண்டும். கிழக்கு மாகாணத்துக்கான முதலாவது ஓட்டிசம் இலவச பாடசாலை இம்மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(அ)

# ஒரே நாளில் காத்தான்குடியில் 50 பேருக்கு டெங்குக் காய்ச்சல்!

## பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

காத்தான்குடி,ஏப்.03

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி நகரசபை பிரிவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாத்திரம் 50 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என காத்தான்குடிப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல். நஸிர்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டெங்கு நோயின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இது தொடர்பில் மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அரசால் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் கீழ் கடந்த நான்கு நாள்களில் காத்தான்குடி பிரதேசத்தில் 4 ஆயிரத்து 137 வீடுகளில் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 221 வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, வீட்டு முற்றத்தில் டெங்கு குடம்பிகள் இனங்காணப்பட்ட 49 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.- என்றார். (அ)

# கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள மேல்மாடித் தெருப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை சிசுவொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சடலம் மீட்கப்பட்ட கிணறு அமைந்துள்ள தெருவில் உள்ள வீடு ஒன்றில், வைத்தியத் தம்பதியினர் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர். அவர்களது வீட்டில் வேலை செய்யும் பெண் கடந்த 27 ஆம் திகதி சிசுவொன்றைப் பெற்றெடுத்துள்ளதாகவும், அந்த சிசுவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். பிரஸ்தாப பெண் தற்போது தலைமறைவாகி உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் மாட்டு வண்டியில் கொண்டாடப்பட்ட முட்டாள்கள் தினம்!



புகைப் பாவனையைக் கட்டுப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு,ஏப்.03

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உலக முட்டாள்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி உலக முட்டாள்கள் தின ஊர்வலம், வாவிப் பூங்காவுக்கு அருகில் இருந்து அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் மட்டக்களப்பு -திருமலை பிரதான வீதி வழியாக அரசடி சந்தி வரை இடம் பெற்றது.

அலங்கரிக்கப்பட்ட இந்த மாட்டு வண்டியில் 'இன்னும் புகைபிடிக்கும் உங்கள் சிலருக்கு என்றும் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்' என்ற கோஷத்தைத் தாங்கிய பதாகை ஒட்டப்பட்டிருந்தது.

ஊர்வலத்தின் போது வீதியால் சென்ற பொது மக்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட அந்தத் துண்டுப்பிரசுரத்தில் 'இன்னும் புகைப் பிடிக்கும் உங்களில் சிலருக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள். இந்த வாழ்த்து பொருத்தமற்றது எனின் பொருத்தமானவருக்கு கொடுத்து வாழ்த்துங்கள். இந்த வருடம் இந்த வாழ்த்து உங்களுக்குப் பொருந்துமாயின் அடுத்த வருடம் பொருந்தாமல் இருக்க வாழ்த்துகின்றோம்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புகைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், புகைக்கும் சிலரை அதிலிருந்து விடுபட வைக்கும் முகமாகவும் இந்தச் செயற்றிட்டம் புகைப்பவர்களுக்கு பிறந்த தினமாக உலக முட்டாள்கள் தினத்தில் கொண்டாடப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அம்பாறை மாவட்டத்தில் இம்முறை 40 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகம்!

## கடந்த வருடம் 95 ஆயிரம் ஏக்கரில்!!

அம்பாறை,ஏப்.03

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கை 40 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளப்படவுள்ளது என மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஏ.கலீஸ் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்காக விவசாயிகளை அறிவுறுத்தும் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'கடந்த வருடம் அம்பாறையில் 95 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது நிலவும் வறட்சி காரணமாக 40 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் நெற் செய்கையுடன் உப உணவுப் பயிர்ச் செய்கைகளும், சில பிரதேசங்களில் உப உணவுப் பயிர்ச்செய்கை மாத்திரமும் மேற்கொள்ளப்படவுள்ளன.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# அம்பாந்தோட்டை துறைமுகம்: தகவல்கள் நாடாளுமன்றுக்கு!

**மல்வத்த மகாநாயக்கருடனான சந்திப்பின் பின்னர் கருணாநாயக்க**



கொழும்பு, ஏப்.03

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மல்வத்த மகாநாயக்க தேரரை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மல்வத்த மகாநாயக்கர்-

'அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், எதிர்காலத்தில் வரிகள் குறைக்கப்படுமே தவிர அதிகரிக்கப்படமாட்டா என்று ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# இலங்கை வாக்குறுதிகளை நிறைவேற்றினால் மேலதிக ராணுவ ஒத்துழைப்பு




கொழும்பு, ஏப்.03

இலங்கை தமது மக்களுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்தும் முன்னெடுத்தால் இரு நாட்டு இராணுவங்களுக்கும் இடையிலான மேலதிக ஒத்துழைப்புக்கு அடிப்படையாக இருக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க-இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான இராணுவ ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக நல்லிணக்கம் மற்றும் நீதி செயல்முறைகளில் இலங்கையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு ஒரு வாரகாலப் பயணத்தை மேற்கொண்டிருந்த யுஎஸ்எஸ் கொம்ஸ் ரொக் என்ற அமெரிக்க கடற்படைக் கப்பல் நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றதை அடுத்து அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யு.எஸ்.எஸ். கொம்ஸ் ரொக் கொழும்பில் தரித்திருந்தபோது, மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த மீட்பு ஒத்துழைப்பு ஆகியவற்றை மையப்படுத்தி, அமெரிக்க-இலங்கைக் கடற்படை மரைன் படையினர் கூட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த 12 மாத காலத்துக்குள் அமெரிக்க-இலங்கை மரைன் படையினருக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது இராணுவப் பயிற்சி ஒத்திகை இதுவாகும்.

இந்தப் பயிற்சியில் அமெரிக்க கடற்படையினர் 325 பேர் மற்றும் மரைன் படையினரும், இலங்கைக் கடற்படையினர் 175 பேரும் மற்றும் மரைன் படையினரும் ஈடுபட்டனர்.

யு.எஸ்.எஸ். கொம்ஸ் ரொக்கில் உள்ள அமெரிக்க மரைன் படையினர், இலங்கை மரைன் படையினருக்கு உயிர்காப்பு, தொடரணி நடவடிக்கைகள், மனிதாபிமான உதவி, மற்றும் அனர்த்த மீட்பு ஈடுபாடான நகர்வு உள்ளிட்டவற்றில் பிந்திய தந்திரோபாயங்களையும், நுட்பங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். -என்றுள்ளது. (எ)

# அரசியல் பழிவாங்கலே நல்லாட்சியில் அதிகம்!




கொழும்பு, ஏப்.03

நல்லாட்சியில் மக்களுக்கான ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவதுடன் அரசியல் பழிவாங்கல்களே தற்போது அதிகமாக இடம் பெறுகின்றன என்று குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, நல்லாட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வென்னப்புவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அபிவிருத்தி முடக்கப்பட்டு வாழ்க்கைச்செலவு அதிகரித்துக் காணப்படுகின்றது. நாட்டை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்தே ஆட்சி நடைபெறுகின்றது.

இந்த நிலையில், தேசிய அரசின் இரண்டு கட்சிகளையும் விட மக்களின் ஆதரவு எமது அணியினருக்கே உண்டு. எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அது பிரதிபலிக்கும். - என்றார். (எ)

# திருமலை எண்ணெய் தாங்கிகள் அனைத்தும் இந்திய பெற்றோலிய நிறுவன பயன்பாட்டுக்கு!



திருகோணமலையில் உள்ள அரசுக்குச் சொந்தமான அனைத்து எண்ணெய் தாங்கிகளையும் இந்தியப் பெற்றோலிய நிறுவனம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கனிய எண்ணெய் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கப்பல்களுக்கு எண்ணெய் விநியோகிப்பதற்குத் தேவையான குழாய்களைப் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது இந்திய பெற்றோலிய நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதன் ஒருங்கிணைப்பாளர் டி.ஜே.ராஜகருணா கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

- அந்தத் தாங்கிகளைப் பயன்படுத்த அரச தரப்பில் இருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், பெட்ரோல் எண்ணெய் களஞ்சியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அந்த நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இந்திய பெற்றோலிய நிறுவனத்தின் இந்நடவடிக்கை சட்டவிரோதமானது என்று பிரதமர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், அந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காதமை வருத்தமளிக்கின்றது. -என்றார். (எ)

# சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்றக் குழு பங்களாதேஷ் பயணம்

கொழும்பு, ஏப்.03

பங்களாதேஷில் இடம்பெறும் 136 ஆவது அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐவர் அடங்கிய குழு ஒன்று பங்களாதேஷுக்குச் சென்றுள்ளது.

சபாநாயகர் கருஜய சூரியவின் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், அப்துல்லாஹ் மஹ்றூப், ரோஹிணி குமாரி விஜயரத்ன மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் அங்கு சென்றுள்ளனர்.

உலகின் 150 நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகளுடன் டக்காவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகிய இந்த மாநாடு நாளை மறுதினம் புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது. (எ)

# ஐ.நா. அமைதிப் படையில் இணைவதற்காக இலங்கை இராணுவம் மாலிக்குப் பயணம்

கொழும்பு, ஏப்.03

இலங்கை இராணுவத்தினர் 200 பேர் மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இணைந்து கொள்வதற்காக அடுத்த மாதம் செல்லவுள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தவை வருமாறு:-

மாலியில் ஐ.நா.அமைதிப்படையில் இணைந்து கொள்ளவுள்ள இலங்கை படையினர், காங்கேசன்துறையில் இருந்து சூரியவெவ வரையில் களப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

ஐ.நாவின் நியமங்களுக்கேற்ற ஆய்வு முறைகளின் பின்னரே மாலி செல்லும் இலங்கைப் படையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாலியில் இலங்கை இராணுவப் பட்டாலியன் ஒன்றை ஐ.நா. அமைதிப்படையில் ஈடுபடுத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், மனித உரிமை மீறல்களுடன் தொடர்புற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, இலங்கைப் படையினரை மாலிக்கு அனுப்பும் நடவடிக்கைகளை ஐ.நா அதிகாரிகள் தாமதித்திருந்தனர். -என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் கடந்த மார்ச் 22ஆம் திகதி சமர்ப்பித்த அறிக்கையில் இது பற்றிக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# அரிசி இறக்குமதி வரிச்சலுகை மே 31 வரை நீடிக்க நடவடிக்கை



கொழும்பு, ஏப்.03

அரிசி இறக்குமதிக்கான வரிச்சலுகையை மே மாதம் 31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டது.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த இந்த வரிச்சலுகை கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட இருந்தது.

இதனூடாக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் அரிசிக்கு விசேட வர்த்தகப் பொருளுக்கான வரியாக 5 ரூபா மாத்திரமே அறிவிடப்பட்டது.

வரிச்சலுகைக்கு முன்னர் தீர்வை வரி உள்ளிட்ட பல வரிகள் உள்ளடக்கப்பட்டு ஒரு கிலோகிராம் அரிசிக்கு 50 ரூபா இறக்குமதி வரி அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# இனரீதியிலான ஒரு பிரச்சினையாக வில்பத்து விவகாரத்தை மாற்றாதீர்!

## இதனால் ஜனாதிபதிக்கே பெரும் அழுத்தம்

கொழும்பு, ஏப்.03

வில்பத்து வனம் குறித்த ஜனாதிபதி வர்த்தமானி அறிவிப்பை நீக்குமாறு கோரிவரும் கருத்தை தாம் எதிர்ப்பதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன இந்தப்பிரச்சினையை தேசிய இன ரீதியிலான பிரச்சினையாகப் பிரசாரம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால், ஜனாதிபதி பெரிய அழுத்தங்களுக்கு முகம்கொடுத்துள்ளார் என்று சூழல் பாதுகாப்பு அமைப்பின் பணிப்பாளரும் சூழலியலாளருமான சஜீவ ஷாமிக சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வில்பத்து வர்த்தமானி அறிவித்தலால் வில்பத்து வனம் பாதுகாப்புப் பெறுகின்றது.

இந்த அறிவிப்பை ரத்து செய்யுமாறு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான குழு முன்னெடுத்துச் செல்லும் அழுத்தங்களுக்கு அதிகாரிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்தப் பிரச்சினையை தேசிய இன ரீதியிலான பிரச்சினையாகப் பிரசாரம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால், ஜனாதிபதி பெரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்.- என்றார்.

இதேவேளை, ஜனாதிபதி அறிவிப்புச் செய்துள்ள தீர்மானத்தை எந்தவகையிலும் மாற்றம் செய்யக் கூடாது என்று சுற்றாடல் கல்விக்கான மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பாளரும் சூழலியலாளருமான ரவீந்திர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அவிசாவளை விகாரையில் சேதப்படுத்தப்பட்டன புத்தர் சிலைகள்



கொழும்பு, ஏப்.03

அவிசாவளை, தீகல பிரதேசத்திலுள்ள புராண விகாரையில் காணப்பட்ட அதிகமான புத்தர் சிலைகளுக்கு மர்ம நபர்களால் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் இடம்பெறும் போது அந்த விகாரையில் தேரர்கள் எவரும் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. விகாரையில வசதிவாய்ப்புக்கள் காணப்படாமை இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் தெரனியகலை ஸ்ரீ அபினவாராம விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ வஜிரவங்சதிஸ்ஸ தேரர் தெரிவிக்கையில்:

இதுபோன்ற சேதததை விகாரைக்கு ஏன் செய்தார்கள் என்பது இதுவரை தெரியவரவில்லை.

இதுதொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. எவரும் இந்தச்சம்பவத்துக்காகக் கைது செய்யப்படவில்லை.- என்றார். (எ)

# வில்பத்து காணி விவகாரம்: அரசுக்கு சிவப்பு சமிக்ஞை!

கொழும்பு, ஏப்.03

வில்பத்து காணி விவகாரத்தில ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீள் பரிசீலனை செய்யாவிடின், தங்களது கட்சியின் அரசுடனான உறவையும் சீர் தூக்கிப் பார்க்க வேண்டி வரும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அரசுக்கு சிவப்புச் சமிக்ஞை விடுத்துள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிராந்தியக் கிளை ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில கலந்துகொண்டு உரையாற்றும்போது கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி இதனைத் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் இனவாத நடவடிக்கைக்கு சிறுபான்மைச் சமூகம் பாடம் புகட்டியதை இந்த அரசும் மறக்கக் கூடாது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் மன்னாரில் கைது!

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் 4 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினருக்குக்கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 44 வயதுடைய மன்னாரைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# தினசரி ராசி பலன் 03.04.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 21 ஆம் நாள் ஸப்தமித்திதி. பகல் 1.05 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: திருவாதிரை இரவு 11.59மணிவரை. பின்புனர்பூசம். சித்தாமிர்தயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 7.39 மணி முதல் 9.10 மணி வரை. சுபநேரம்: பகல் 12.07 மணி முதல் 1.36 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: பங்குனிமாத வளர்பிறை அஷ்டமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவாதிரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. தொழில் வசதிகள் மந்தமாகும். அரச உதவிகளில் தடங்கல் தோன்றும். தொழிலாளர்களுக்கு தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கத் தாமதமாகும்.

**ரிஷபம்:** யோகமான நாள். இன சன ஒற்றுமைகள் வளர்ச்சி அடையும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. தனவரவு அதிகரிக்கும். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பப் பகை தீரும்.

**கடகம்:** சஞ்சலமான நாள். மனதில் ஒருவித பதற்றநிலை காணப்படும். உடல், உளப்பாதிப்புகளால் தேகநலம் குன்றும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வியாபாரிகள் அதிக லாபம் பெறுவதுடன், புதிய முதலீடுகளுக்கு வாய்ப்பான நாளாகும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அளவுக்கதிகமாகும். தொழிலில் நிறைய உழைக்க வேண்டி வரும்.

**துலாம்:** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. சிலருக்கு தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** கவலையான நாள். குடும்பத்தில் பல பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள் வேலையை இழக்க நேரிடும். தொழிலில் கவனம் தேவை.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அதிகரித்தலும் மன அமைதியின்மையும் ஏற்படும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். தனவரவு அதிகரிக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து சுற்றுலாச் செல்வார்கள். பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும்.

**கும்பம்:** மேன்மையான நாள். தொழிலிலிருந்த தொல்லைகள் நீங்கும். கடன் தொல்லைகள் குறையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்ச்சி கிடைக்கும்.

**மீனம்:** துன்பமான நாள். நண்பர்களுடன் பகை விரோதம் ஏற்படும். உடல்நலம் பாதிக்கப்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் நாள் அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இந்நாள் நற்கருமங்களுக்கு உகந்ததல்ல.

# பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்றால் பொதுமக்கள் 1977 இற்கு தகவல் தரலாம்!

## நுகர்வோர் அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, ஏப்.03

பாவனைக்கு உதவாத உணவு அல்லது உரிய தகவல்களற்ற உணவுப் பொருள்களை விற்பனை செய்வோர் தொடர்பாக நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபைக்குத் தகவல்களைத் தெரிவிக்குமாறு சபையின் தலைவர் ஹசித திலகரத்ன பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இதற்காக 1977 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் சில குறுகிய நோக்கம் கொண்ட வர்த்தகர்கள் காலாவதியான மற்றும் பழுதடைந்த உணவுப்பொருள்களை சந்தைக்கு விநியோகித்து வருகின்றனர். அது தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் நுகர்வோர் அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

புத்தாண்டு காலப்பகுதியில் சந்தைக்கு விநியோகிப்பதற்காக தயார்நிலையில் இருந்த ஒரு தொகை கருவாடு புறக்கோட்டை கரையோர வீதியில குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த போது நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட 2 ஆயிரம் கிலோ கருவாடு அங்கு களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தது. அவற்றின் பெறுமதி 20 லட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும். புத்தாண்டு காலப்பகுதியில் அவற்றைச் சில்லறை விற்பனைநிலையங்களுக்கு விநியோகிப்பதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.- என்றார். (எ)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (ஐ-10)

## வேகமாகக் குறைவடைந்து வருகிறது 'இன்புளுவன்சா' காய்ச்சலின் பாதிப்பு!



கொழும்பு, ஏப்.03

'இன்புளுவன்சா' காய்ச்சலால் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் இப்போது வேகமாகக் குறைந்து வருகின்றனர் என சுகாதார சேவைகள் அமைச்சின் இயக்குநர் நாயகம், மருத்துவர் ஜெயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், தலைவலி, தொண்டை அரிப்பு, உடல் உளைவு, வயிற்றோட்டம், வாந்தி எடுத்தல் ஆகியன மூன்று அல்லது நான்கு நாள்களுக்குத் தொடர்ந்து உபாதை தரும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நாட்டின் காலநிலை தொடர்ந்து அடிக்கடி மாறுவதாலேயே நோய் வேகமாகப் பரவும் தன்மை அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'இன்புளுவன்சா' நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருக்கமாக பழகுவதைத் தவிர்த்துக் கொண்டால் இந்த நோய் வேகமாகப் பரவுவதைத் தடுக்க இயலும் என்று சுகாதார சேவைகள் அமைச்சின் இயக்குநர் நாயகம் மேலும் எடுத்துக் கூறி உள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட்டே வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் மருத்துவர் ஜெயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இன்புளுவன்சாவால் பாதிப்புற்றவர்களின் இரத்த மாதிரிகள் முறையே கண்டி, கிளிநொச்சி, பிபில ஆகிய மாவட்டங்களில் இருந்து மொத்தம் 1548 மாதிரிகள் கடந்த மார்ச் மாதத்தில் கிடைத்தன. அவற்றில் 528 இல் மட்டுமே நோய்த் தொற்று இருந்தன எனப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிந்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## சிறுவரை வேலைக்கு அமர்த்தினால்
## இனி அபராதம் ரூ.25 ஆயிரம்

கொழும்பு, ஏப்.03

இலங்கையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இந்த நிலையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களிடம் அறவிடப்படும் தண்டப் பணம் அதிகரிப்பு தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 10 ஆயிரம் ரூபாவாக உள்ள தண்டப் பணத்தை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 18 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு சிறுவர்களை சட்ட விரோதமாக வேலைக்கு அமர்த்துதல், மனித ஆட்கடத்தலுடன் தொடர்புடைய குற்றமாகும்.


எனவே, இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# திருஞான சம்பந்தர்
# ஆதீனத்தை ஸ்தாபித்த முதலாவது குருமஹா சந்நிதானம்

## நல்லைக் குருமணியின் குருபூசை தினம் இன்று

உலகெலாம் நிறைந்து பரந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுடைய இளைய திருக்குமாரர் முருகப் பெருமான், வழிபடும் அடியார்களுக்கு அருள்புரியவென்று எழுந்தருளி வீற்றிருந்து அருளாட்சி செய்யும் இடம் நல்லூர் எனும் புனித தலமாகும்.

இந்த நல்லையம்பதியிலே முருகன் ஆலய மேற்கு வீதியில் அமைந்திருக்கும் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஸ்தாபித்த சுவாமிகள் நல்லைக் குருமணியின் 36 ஆவது குருபூஜைத்தினம் இன்றாகும். 1966 ஆம் ஆண்டிலே 'மணிபாகவதர்' என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற முதலாவது குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட



இந்த நல்லை ஆதீனம், சைவமும் தமிழும் தழைத்தோங்கவென பல்வேறு சேவைகளை நல்லமுறையிலே செய்து வருகின்றமை சிறப்பம்சமாகும்.

"கடவுள்" என்று ஒருவர் இருக்கின்றாரா? அப்படி இருந்தால் அவர் எப்படி இருப்பார்? அவரது உருவம்தான் என்ன? அவரைக் கண்டிருக்கின்றீர்களா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போகின்ற மாணவர்கள் வாழும் இன்றைய விஞ்ஞான யுகத்திலே இந்த நல்லை ஆதீனம் ஒன்று தான் ஆன்மீக நாட்டத்தை மக்களிடையே உண்டு பண்ணி, சமய அடிப்படை உண்மைகளை விளங்கப்படுத்தி, மக்களின் தம் வாழ்க்கைக்காகத் தன்னையே அர்ப்பணித்துப் பாடுபட்டு வருகிறது என்று கூறினால் மிகையாகாது.

மேலும், நல்லைக்கந்தன் மஹோற்சவ காலத்திலே இந்த மணிபாகவதர் என்ற தம்பிரான் சுவாமிகள் ஆலய முன்றிலிலே கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், இராமாயணம், மகாபாரதம் முதலான விடயங்கள் தொடர் பிரசங்கமாக செய்யும் நிகழ்வு நடைபெறுவதுண்டு.

அந்தக் காலத்திலே இரவு 10.30 மணி வரைக்கும் மேலாகக்கூட அங்கே அமர்ந்திருந்து பிரசங்கம் கேட்டுச் செல்லும் அடியார்கள் நிறையப்பேர் உள்ளனர். தம்முடைய தொண்டையினாலேயே தொண்டு செய்து சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் என்று கூறினால் அது சாலப் பொருந்தும்.

கணீரென்ற குரல்வளமுடைய சுவாமிகளின் சாரீரம் கேட்கக் கேட்கத் தெவிட்டாமல் இனிக்கும் தன்மையுள்ளது. கதை சொல்லும் போது சம்பவங்களை விளக்குகின்ற அவரது பேச்சு வன்மை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல அமைந்திருக்கும். இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் மாநகர், கனடா போன்ற இடங்களுக்கும் சென்று சங்கீத கதாப் பிரசங்கம் செய்த பெருமை இவரையே சாரும். இது யாழ் மக்களுக்கும் பெருமைதான்.

> கணீரென்ற குரல்வளமுடைய சுவாமிகளின் சாரீரம் கேட்கக் கேட்கத் தெவிட்டாமல் இனிக்கும் தன்மையுள்ளது. கதை சொல்லும் போது சம்பவங்களை விளக்குகின்ற அவரது பேச்சு வன்மை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல அமைந்திருக்கும்.

மேலும், இப்போது முதல்வராக இருக்கின்ற இரண்டாவது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தமது குருவின் பணியைப் பின்பற்றி ஆலய மகா கும்பாபிஷேகம், மஹோற்சவம், சைவசமய விழாக்கள், மத வைபவங்கள் முதலானவற்றில் அருளாசியுரைகளை வழங்கி வருகின்றார். அதுமட்டுமன்றி, ஆதீனத்திலே பாலர் வகுப்பு, பண்டித வகுப்பு, கோலம் வகுப்பு, சங்கீத இசை வகுப்புகள் முதலானவற்றையும் நடத்தி மக்களிடையே கலைகள் வளரவும் ஆவன செய்து வருகின்றமையும் சிறப்பம்சமாகும்.

ஆகவே, இன்றைய காலகட்டத்தில் சுவாமிகளின் குருபூசையைக் கொண்டாடுவதோடு மட்டும் நின்றுவிடாமல் அவர் விட்டுச் சென்ற ஆக்கபூர்வமான பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

"தெய்வத் தமிழ்ச் சுடர்"
இராசையா ஸ்ரீதரன்




பொன்.வேணு கிருஷ்ணா

இதேபோன்று குளோரோபுளோரோ கார்பன் போன்ற சில சிக்கறசேர்வைக ளால் ஓசோன் படை பாதிக்கப்படுகிறது. இவ்வகையான சேர்வைகளால் புற ஊதாக்கதிர்கள் நேரடியாக புவியினை அடைந்து அவற்றில் ஒரு பகுதி புவியி லிருந்து தெறிப்படைந்து வான்வெளிக் குத் திரும்பினாலும் பச்சை வீட்டு வாயுக்கள் அவற்றின் வெப்பசக்தியைப் வெப்பம் புவியிலிருந்து நீங்கு வதனை தடுக்கிறது. இதனால் புவியின் வெப்பம் வருடாவருடம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இவ்வாறான வெப்பநிலை அதிகரிப் பினால் இன்னும் 500 வருடங்களில் 7-13 மீற்றர் வரை கடல்மட்டம் அதி கரிக்கலாம் என விஞ்ஞானிகள் தெரி விக்கின்றனர்.

இதனால் பல பிரதேசங்கள் (குறிப் பாக மாலைதீவுகள் மற்றும் ஒல்லாந்து) நீரில் மூழ்கும் சாத்தியக்கூறு காணப்படு கிறது. இதை விடவும் பாரதூரமான ஆபத்தாகக் கருதப்படுவது கிறீன்லாந்து தீவின் மீதிருக்கும் இராட்சதப்பனிக் கட்டிப் படலம் உருகத் தொடங்குவதால் உண்டாகும் நீர் சமுத்திரங்களில் சேர்தலும் நீர்மட்டம் அதிகரிக்கக் காரணமாகும்.

இதனால் இன்னும் கடல் மட்டம் 7 மீற்றர் வரை உயரலாம் என தெரிவிக் கப்படுகிறது. மேலும் அண்டார்ட்டிக்




காவில் உள்ள பனிப்பாறைகளும் உருகுமெனில் கடல் மட்டம் இன்னும் 6 மீற்றர் வரை உயரும் என அச்சம் வெளியிடப்படுகிறது.

இவ்வாறான விளைவுகளை தடுப் பதற்கு எரிபொருள்களின் புகையை கட்டுப்படுத்தல், மரங்களை நடுதல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள் வதனால் மேலும் புவி வெப்பமடை தலைத் தடுக்கமுடியும்.

## அமுலுக்கு வந்தது பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம்

பல ஆண்டுகள் நடைபெற்ற சிக கலான பேச்சுகளுக்குப் பின்னர் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பருவ



நிலை மாற்றம் தொடர்பாக கையெழுத் தான உலக நாடுகளின் முதல் ஒப்பந்த மான பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் நவம்பர் 2016 அமுலுக்கு வந்தது.

தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்தில் இருந்த அளவிலிருந்து சராசரியாக இரண்டு டிகிரி உலக வெப்பமயமா தலைக் குறைப்பதை இது இலக்காகக் கொண்டிருக்கிறது.

பலத்த புயல்கள், வறட்சிகள் மற்றும் கடல் நீர்மட்டம் உயர்தல் உட்பட ஆபத்தான பருவநிலை மாற்றங்களை தவிர்ப்பதற்கு இந்த இலக்கு முக்கிய மானது என்று விஞ்ஞானிகள் கூறுகின் றனர்.

தொழிற் புரட்சி மேற்கொள்ளப்பட்ட காலத்திற்கு முன்பை விட பூமியில் ஏற்கெனவே ஒரு டிகிரி வெப்பம் இப் போது அதிகரித்திருக்கிறது.

எரியாற்றல் உற்பத்தி, போக்குவரத்து, விவசாயம், குடியேற்றம் ஆகியவற்றுக் காக காடுகளை அழிப்பதால் மனிதர் கள் வெளியேற்றக்கூடிய பசுங்குடில் வாயுக்களால் முக்கியமாக பூமியின் வெப்பம் அதிகரிப்பதாக பருவநிலை அறிவியல் குற்றம் சாட்டுகிறது.

இந்த வாயுக்கள், குறிப்பாக கார்பன் டை ஆக்ஸைட் வளி மண்டலத்தில் செறிவாகி, சூரியனில் இருந்து வரு கின்ற வெப்பத்தை பூமியில் தங்கிவிடச் செய்கிறது.



இவ்வாறு உலகம் வெப்பமடைவது தான் பருவநிலை மாற்றத்திற்கு காரண மாவதாக விஞ்ஞானிகள் குறிப்பிடு கின்றனர்.

அதனால், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோள் பூமியின் வெப்பத்தை 2 டிகிரி குறைப் பதாக நாம் கூறுகின்றபோது, இந்த ஒப்பந்தத்தில் இணைந்திருக்கும் நாடு கள் தங்களுடைய கார்பன் வெளியேற் றத்தை கடுமையாக குறைக்க வேண்டி யிருப்பதை குறிக்கிறது.

மாசு வெளியேற்றம் குறைவான எரிபொருள் ஆதாரங்களுக்கு மாறுவது செலவு குறைவானது, நீண்டகாலம் நிலைத்திருப்பது என்று நிபுணர்கள் நம்பினாலும், புதைபடிவ எரிபொருள் களின் பயன்பாட்டை குறைப்பது பொருளாதாரத்தில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்துவது மிகப் பெரிய சவாலாக இருக்கும்.



### இந்த ஒப்பந்தம் "அமுலுக்கு வருவது" எதைக் குறிக்கிறது?

இந்த ஒப்பந்தம் செயற்பாட்டுக்கு வருவது என்பது, இது சர்வதேச சட்ட மாவதை குறிக்கிறது என்று ஐக்கிய நாடுகள் அவையின் அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், தாங்கள் அளித்திருக்கும் உறுதிமொழியை நிறைவேற்ற கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு செயல்படத் தொடங்க வேண்டும்.

90 இற்கு மேற்பட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்துக்கு இசைவு தெரிவித்திருக் கின்றன. கடந்த ஆண்டு நடைபெற்ற பாரிஸ் மாநாட்டில், ஐ.நாவின் 197 உறுப்பு நாடுகளும் இந்த ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டுள்ளன.

ஆனால், இந்த ஒப்பந்தம் சட்ட பூர்வமாக கட்டுப்படுத்தாமல் இருப்ப தால், ஒவ்வொரு நாடுகளின் தன்னார்வ அர்ப்பணத்தையும் செயற்பாடுகளையும்



சார்ந்துதான் இது அமைகிறது.

நாடுகள் மேற்கொள்ளும் நட வடிக்கை, நிகழ்வுகள் அளவிடப்பட்டு மீளாய்வு செய்யப்படும் என்று 1990 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒப்பந்தம் தொடர்பாக பல சுற்று பேச்சுக்களை ஏற்பாடு செய்த ஐக்கிய நாடு கள் அவையின் பருவநிலை மாநாட்டின் தலைமை செயலகம் கூறியிருக்கிறது.

ஆனால், அது எவ்வளவு சரியாக செய்யப்படும் என்பதற்கு விடை யில்லை.

அடுத்தவாரம் மொராக்கோவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றம் பற்றிய கூட்டத்தில் ஒரு விதிமுறை புத்தகத்தை எழுதுவது பற்றி கலந்துரையாட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

"2018 ஆம் ஆண்டுக்கு முன்னதாக, இன்னும் சில ஆண்டுகளில், அரசுக ளும் கட்சிகளும் இந்த விவரங்கள் அடங்கிய சட்ட புத்தகத்தை முடித் திருக்கும்..." என்று ஐக்கிய நாடுகள் அவையின் செயல் அதிகாரி பேட்ரீசியா எஸ்பினோசாவும், வரவிருக்கும் பருவ நிலை மாற்றம் பற்றி கூட்டத்தை நடத்துகின்ற மொராக்கோவின் வெளி யுறவு அமைச்சருமான சாலஹெதீன் மிஸெளயரும் கூட்டாக வழங்கிய அறிக்கை தெரிவிக்கிறது.

"இந்த முயற்சியில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் அவர்களுடைய திற னுக்கு ஏற்ப சிறப்பாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் பருவ நிலை மாற்றம் தொடர்பான செயற் பாடுகளை எல்லா தரப்பினரும் அதி கரிக்கத் தேவையான வெளிப்படை தன்மை உறுதிப்படுத்தப்படும்.

### இதன் முக்கியத்துவம் என்ன?

மிக விரைவாக நடைமுறைக்கு வந்திருக்கும் முக்கிய சர்வதேச ஒப்பந் தங்களில் பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தமும் அடங்குகிறது.

தொடக்கத்தில் இது, 2020 ஆம் ஆண்டு நடைமுறையாவதாக இருந் தது. அந்த நேரத்தில் கூட பல நாடுகள் இதனை ஏற்றுகொள்ளாது என்று பலரும் நம்பினர்.

இந்த ஒப்பந்தம் செயற்பாட்டிற்கு வருவதற்கு உலகின் ஒட்டுமொத்த பசுங்குடில் வாயுக்களில் குறைந்தது 55 சதவீதத்தை வெளியேற்றுகின்ற 55 நாடுகள் இதனை ஏற்றுக்கொள்வது அவசியமாகியது.

எதிர்பாராதவிதமாக அதிக மாசு வெளியேற்றும் நாடுகளான சீனா, அமெரிக்கா, ஐரோப்பியஒன்றியம் மற்றும் இந்தியா நாடுகள் கடந்த சில மாதங்களில இதனை ஏற்றுக்கொண்ட தால், கட்டாயமாக தேவைப்படுகின்ற அளவை எட்டிய இந்த ஒப்பந்தம் செயற்பட தொடங்கியிருக்கிறது.

தொடக்கத்தில் பாரிஸ் ஒப்பந்தத்தை 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்து வதாக திட்டமிடப்பட்டிருந்தது. எனவே, 2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான இடைப்பட்ட காலத்தில் வளிமண்டலத்தில் மாசு அளவு இன் னும் செறிவுறும் என்ற கவலைகள் எழுந்தன. இதனால் இயற்கையை சுத்தப்படுத்துவது மிகவும் கடினமாகும்



என்று கருதப்பட்டது.

ஒக்ரோபர் 2016 இல், வளிமண்டலத் திலுள்ள கார்பன்டைஆக்ஸைடின் அளவு 400 பிபிஎம் என்கிற அளவை கடந்து அதிக நிலையில் இருப்பதாக வும், பல தலைமுறைகளுக்கு இது குறையப் போவதில்லை என்றும் உலக வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித் திருக்கிறது.

2016 ஆம் ஆண்டு முழுவதும் இந்த அதிக அளவை தாண்டியதாக இருக்கின்ற முதல் ஆண்டு என்றும் அது எச்சரித்திருக்கிறது.



பாதுகாப்பானவரையறைக்கு மேலாக கால் பகுதி அளவு உயர்வாக பசுங்குடில் வாயுக்களை உலகம் வெளியேற்றி வருவதை எச்சரித்து ஐக்கிய நாடுகள் அவையின் சுற்றுச்சூழல் திட்டம் பாரிஸ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு ஒரு நாளுக்கு முன்னர் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டு உலக அளவில் வெப்பம் அதிகரிப்பதை 2 டிகிரி செல சியஸ் குறைப்பதற்குத் தேவையான கார்பன் டைஆக்ஸைட் வெளியேற்றத் துக்கு அதிகமாக 12 முதல் 14 கிகா டன்கள் வெளியேற்றப்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டு கார்பன் வெளி யேற்றம் 56 கிகா டன்களை எட்டுகின்ற போது, 2.9 முதல் 3.4 டிகிரி செல்சியஸ் வெப்பம் இந்த நூற்றாண்டிலேயே அதிகரிக்கக் காரணமாக அமையும் என்று ஐக்கிய நாடுகள் அவை சுற்றுச் சூழல் திட்டத்தின் மாசு வெளியேற்ற இடைவெளி அறிக்கை எச்சரித்திருக் கிறது.

ஒரு கிகா டன் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் விமானத் துறை வெளி யேற்றும் மாசு உட்பட போக்குவரத்து துறை வெளியேற்றுகின்ற மாசு அள வாகும்.

கேள்வி தொடரும்...

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழ்த்தேசியத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழ்த்தேசியத்தின் உரிய வரலாற்றுப் பதிவு ஆவண 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இன்றைக் கீழ்ல் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிட்டுள்ள முக்கியமான - நன்மையானமான - விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




105

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### வெளிநாட்டுப் பிரதிநிதிகள் - புலிகள் சந்திப்பு

நோர்வே நாட்டைச் சேர்ந்த ஒடன் ஹோம், ஜோகன் கபிரியல் சென், நெதர்லாந்தைச் சேர்ந்த லெப் கேணல் போல ஹென்றி ஹோஸ்ரிங், கனடாவைச் சேர்ந்த மேஜர் கிளைவ் மில்னர் ஆகிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள், பெப்ரவரி மாதம் 5 ஆம் நாள் காலை பத்து மணியளவில் சிறிலங்கா உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் வந்திறங்கிய இவர்கள், கண்டுக்குழியிலுள்ள எமது அரசியல் தலைமைச் செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். தலைவர் பிரபாகரனும், நானும், தமிழ்ச்செல்வனும் இவர்களை வரவேற்று ஒரு மணி நேரம் வரை கலந்துரையாடினோம். விடுதலைப் புலிகளின் தலைவரும், இராணுவத் தளபதியுமான பிரபாகரனை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிட்டியமையையிட்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய தலைவர் பிரபாகரன், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் மத்தியில் செய்யப்பட்ட பகை நிறுத்த உடன்பாட்டைக் கண்காணிப்பதற்காக நிபுணர்களை அனுப்பி வைத்தமைக்காக நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு நன்றி தெரிவித்தார். போர் நிறுத்த உடன்பாட்டைச் சிறப்பாகக் கண்காணிக்கும் வகையில் சமாதானக் குழுக்களுக்குச் சகலவிதமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்குமெனப் பிரபாகரன் உறுதியளித்தார்.

பகை நிறுத்தச் செயற்பாட்டு விதிகளைக் கொண்ட ஆவணம் மிகவும் சுருக்கமானது; மட்டுப்படுத்தப்பட்டது; தெளிவற்றது என்பதுடன் பல சிக்கலான பிரச்சினைகளைக் கையாளக்கூடிய போதுமான வழிமுறைகள் அதில் இருக்கவில்லை என்பதைக் கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களுக்கு நாம் தெளிவாக எடுத்து விளக்கினோம். வடக்குக் கிழக்கு போர்க்களத்தின் யதார்த்தத்தை அவர்களுக்கு தெளிவுபடுத்திய நாம், அமைதி உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர், இரு தரப்பிலிருந்தும் போர் நிறுத்த மீறல் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வருகின்றன எனவும் சொன்னோம். இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் பகை நிறுத்தச் செயற்பாட்டு விதிகள் திருத்தப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டு ஒரு முழுமையான ஆவணமாக நெறிப்படுத்தப்படாமல், கண்காணிப்புக் குழுக்கள் அமைதியைக் காப்பது மிகவும் கடினமான பணியாக இருக்கும் என்பதையும் விளக்கிக் கூறினோம்.

அமைதி உடன்பாட்டுக் குறைபாடுகள் பற்றி நாம் முன்வைத்த ஆக்கபூர்வமான விமர்சனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தனியாகக் கூடித் தமக்குள்ளே மந்திராலோசனை நடத்தினர். எமது விமர்சனத்தின் அடிப்படையில் பகை நிறுத்த உடன்பாட்டின் மூலப் பிரதியை எடுத்து, பகுதி பகுதியாக மீளாய்வு செய்தனர். இறுதியாக, உடன்பாட்டு ஆவணம் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகவும், பல சிக்கலான பிரச்சினைகளைக் கையாளக்கூடிய வழிமுறைகள் அதில் இருக்கவில்லை என்றும் ஏகமனதாக முடிவெடுத்தனர். இரு தரப்பும் விரைவில் கூடி, பிரச்சினைகளை விவாதித்து, ஒரு முழுமையான ஆவணத்தைத் தயாரித்து உடன்பாட்டு மூலப் பிரதியின் துணைப் பிரதியாக அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆலோசனை தெரிவித்தனர். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குத் துணையாக வருகை தந்த அரச அதிகாரியான பிரிகேடியர் பீரிஸ், கண்காணிப்புக் குழுத் தலைவர்களது மதிப்பாய்வை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவர்களது சிபாரிசை அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதாகவும் உறுதியளித்தார். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு புலிகளின் நிலைப்பாட்டுக்குச் சாதகமான முறையில் அமைந்தது. போர் நிறுத்தக் கண்காணிப்பில் அனுபவம் பெற்ற நிபுணர்களின் கருத்தையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. அமைதி உடன்பாட்டை விரிவுபடுத்திச் சீரமைக்க மறுத்து, கண்காணிப்புக் குழுக்கள் செயற்படுவதை வேண்டுமென்றே அரசாங்கம் இழுத்தடித்த வேளையில் கிழக்கில் நிலைமை மோசமாகியது. பாரதூரமான போர் நிறுத்த மீறல்கள் நடைபெற்றன என இரு தரப்பிலிருந்தும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

### போர்நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகள்

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள், ஏழு விடுதலைப் புலிப் போராளிகளுடன் சென்று கொண்டிருந்த கடற்புலிப் படகு ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா கரையோரமாக வந்தடைய நேர்ந்தது. கல்குடா காவல்துறை நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் எமது போராளிகள் தரையிறங்கிய காரணத்தால் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் (ஓர் இயந்திரத் துப்பாக்கி, தானியங்கித் துப்பாக்கிகள்) தொலைத்தொடர்புக் கருவிகளும், படகும் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர் கடற்புலிப் போராளிகள் விடுதலை செய்யப்பட்ட போதும், அவர்களது ஆயுதங்களும், படகும், தொலைத் தொடர்புக் கருவிகளும் கையளிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் பகை நிறுத்த உடன்பாட்டை மீறிய பாரதூரமான விடயமென இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம் சுமத்தின. கல்குடாக் கரையில் தரையிறங்க நேர்ந்தது தற்செயலான நிகழ்ச்சியென விடுதலைப் புலிகள் வாதாடினர். இயந்திரக் கோளாறு காரணமாகத் தரையிறங்க நேர்ந்தவர்களைக் கைதுசெய்து, காவலில் வைத்துத் துன்புறுத்தி, அவர்களது ஆயுதங்களையும் படகையும் பறிமுதல் செய்தது ஒரு பகை நடவடிக்கை என்றும் அது போர் நிறுத்த நல்லெண்ணத்துக்கு விரோதமானது என்றும் புலிகள் தரப்புக் குற்றம் சுமத்தியது. கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்த பாரதூரமான போர் நிறுத்த மீறலாக இச்சம்பவத்தைத் திரிவுபடுத்திக் காட்டியது அரசு தரப்பு. படகில் கனரகப் பீரங்கியுடன், கல்குடா காவல்துறை நிலையத்தை நோக்கி புலிகளின் தாக்குதல் அணி ஒன்று நெருங்கி வந்ததாக அரசாங்கம் குற்றம் சுமத்தியது. இந்த நிகழ்வு குறித்துப் பலப்பத்தபெண்டி எமது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு எழுதிய கடிதத்தில், கண்காணிப்புக் குழுக்கள் நிறுவப்பட்டிருந்தால் இத்தகைய சம்பவங்கள் இலகுவில் தீர்த்து வைக்கப்படலாமெனக் குறிப்பிட்டார்.

*07 பெப்ரவரி 1995*

*திரு.சு.ப.தமிழ்ச்செல்வன*
*பொறுப்பாளர்*
*அரசியல் பிரிவு*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*அன்பின் திரு.தமிழ்ச்செல்வன் அவர்கட்கு,*

*அமைதி பேணும் காலகட்டத்தில் நிகழ்ந்து வரும் போர் நிறுத்த மீறல்கள் பற்றி, மிகவும் கவலையுடன் உங்களுக்கு அறியத் தர விரும்புகிறேன். இவற்றில் சில மீறல் சம்பவங்கள் பாரதூரமானவை ஆகும்.*

*1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் நாளிலிருந்து நடைபெற்ற போர் நிறுத்த மீறல் சம்பவங்களை அரச படைகள் அவதானித்து, பட்டியலிட்டுத் தந்துள்ளன. அவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இந்தப் பட்டியலைப் பார்க்குமிடத்து கிழக்கு மாகாணத்திலேயே பல பாரதூரமான போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமையைக் காணலாம். கடற்புலிகளின் படகு ஒன்று, கனரகப் பீரங்கியுடன் கல்குடாக் கரையோரத்தில் அமைந்துள்ள காவல்துறை நிலையத்தை நோக்கிச் சென்ற சம்பவம் மிகவும் பாரதூரமானது. இச்சம்பவம் அமைதி ஒப்பந்த விதிகளுக்கு மாறானதாகும்.*

*கோரவெளிக்குளம், ஏராளகுளம் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிப் போராளிகள் புதிய பாசறை முகாம்களை நிறுவுகின்றனர் என அவதானிக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் இது குறித்து புலிகளின் பிரதேச தளபதிகளிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து முகாம்கள் அகற்றப்பட்டன. ஆயினும், மீண்டும் இந்த முகாம்கள் நிறுவப்பட்டு வருகின்றன.*

*மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் என்னும் இடத்தில் ஒரு காவல்துறை நிலையத்தையும், நட்டுக்குழி என்னும் இடத்தில் ஒரு புதிய பாசறைத் தளத்தையும் விடுதலைப் புலிகள் அமைத்துள்ளனர் என அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.*

*திருகோணமலை மாவட்டத்தில் காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களது சமாதி அமையப்பெற்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அரசாங்கத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. திரு. அப்பிரட் பொன்னையா தீவரெத்தினம் இந்தச் சமாதியை பல கோணங்களில் புகைப்படம் எடுக்கும்போது கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சியிலுள்ள புலிகளின் பொறுப்பாளர்களை சேர்ந்த கண்ணன், தூயவன் ஆகியோரது பணிப்பின் பேரில், தான் செய்ததாக அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார். எமது ஜனாதிபதி அடிக்கடி இவ் விடத்துக்குச் சென்று வருகின்றமையால், இது அவரது பாதுகாப்புக்கு ஏற்படுத்துள்ள பாரதூரமான அச்சுறுத்தல் என்றே அரசாங்கம் கருதுகிறது.*

*அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதில் இருந்து, விடுதலைப் புலிகள் அமைப்பு கிழக்கு மாகாணத்தில் பெரும் அளவிலான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அரச படைகள் அவதானித்துள்ளன. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை, கிழக்கில் ஒரு போரைத் தொடங்குவதற்கான முயற்சியாக இருக்கலாமென எமது அரசாங்கம் சந்தேகிக்கிறது.*

*போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் செயற்பட்டிருக்குமானால் இத்தகைய மீறல் சம்பவங்களை விசாரித்து, கிரமமான முறையில் உடனடியாகவே இந்தத் தகராறுகளைத் தீர்த்து வைத்திருக்கலாம் அல்லவா? ஆதலால், கண்காணிப்புக் குழுக்கள் உடனடியாகச் செயற்பட வேண்டுமென அரசாங்கம் கண்டிப்பாகவலியுறுத்துகிறது. வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் நீங்கள் தெரிவித்தமை போல, எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் வரை கண்காணிப்புக் குழுக்களின் செயற்பாட்டைப் பிற்போடுவது அவசியமில்லை என்றே அரசாங்கம் கருதுகிறது. நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளை விவாதிக்கும் அதே சமயத்தில், கண்காணிப்புக் குழுக்களும் செயற்படுவதே சாலச் சிறந்த வழி என நாம் கருதுகிறோம்.*

*மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்து உங்களிடமிருந்து விரைவில் ஒரு தெளிவான பதிலை எதிர்பார்க்கிறேன்.*

*உங்கள் உண்மையுள்ள*
*கே.பலபட்டபெண்டி*
*ஜனாதிபதியின் செயலர்*

(தொடரும்...)

# வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்கு துரிதமாகத் தீர்வுகள் பெற்றுத் தரப்படும்

திருகோணமலை, ஏப்.03

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு துரிதமாகத் தீர்வுகள் பெற்றுத் தரப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

திருகோணமலை மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய இளைஞர் முகாம் - 2017 நிகழ்வின் நிறைவு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முறையான மதிப்பீடுகளோ அல்லது திட்டமிடலோ இன்றி முறையற்ற விதத்தில் கடந்த காலத்தில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தமையால் தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போதைய அரசின் கீழ் முறையான திட்டத்துடன் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் இளைஞர்களுக்குச் சிறப்பான எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு அரசையே சாரும். எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் நாட்டுக்குத் தேவையான அபிவிருத்தியுடன் அரசின் செயற்பாடுகள் முன்நோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளன.

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு**



இதன்போது இளைஞர்களுக்கு முன்னுரிமையளித்து அவர்களது பலத்தையும், ஆக்கத்திறனையும் நாட்டின் எதிர்காலத்துக்காகப் பயனுள்ள விதத்தில் உபயோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மீண்டும் நாட்டில இளைஞர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கானதேவையை ஏற்படுத்தாதிருப்பது ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். இளைஞர்களுக்கு உரிய சமூக அந்தஸ்தையும், அவர்கள் செல்லவேண்டியபாதையையும் அமைத்துக் கொடுக்கும் பணியை அரசு நிறைவேற்றும்.


எமது இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்காக அரசியல்வாதிகளின் பின்னால் சென்ற யுகம் முடிவுறுத்தப்பட்டு அவர்களது அறிவு, ஆற்றல்கள் மற்றும் ஆக்கத்திறனின் ஊடாக அவர்களுக்கான சமூகத்தின் கதவுகள்திறக்கப்பட வேண்டும். இளைஞர்களின் அறிவையும், பலத்தையும் உரிய நேரத்தில் நாட்டின் எதிர்காலத்துக்காக முதலீடு செய்ய வேண்டும்.

இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகளைக் கண்டறிந்து தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான பெருமளவு பங்களிப்பை வழங்கக் கூடிய இளைஞர்களை தேசிய உற்பத்தி நடைமுறைகளை வலுப்படுத்தி, ஏற்றுமதிகளை அதிகரித்து, தேசிய பொருளாதார இலக்குகளை வெற்றி கொள்வதற்காக இணைத்துக் கொள்வதற்கான திட்டங்கள் வினைத்திறனான முறையில்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.-என்றார். (ஐ)

## உயர் கல்வி அமைச்சராக எஸ்.பி. நியமனம் பெறுவார்?

கொழும்பு, ஏப்.03

அமைச்சரவை மாற்றத்தின் போது எஸ்.பி. திஸாநாயக்க உயர்கல்வி அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அண்மையில் ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்த வேளையில் இதற்கான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கும் ஆதரவை வழங்கியவர் திஸாநாயக்க என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்வரும் மேதின நிகழ்வை கண்டியில் நடத்துவதற்கான பொறுப்பு எஸ்.பி. திஸாநாயக்கவிடம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எஸ்.பி. திஸாநாயக்க உயர் கல்வி அமைச்சராகப் பதவி வகித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லூர் யூரோவிலில் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஏப்.03

யாழ். முகாமையாளர் சம்மேளனம் 'வெளிநாட்டு வீட்டுக் கடன் நிதிச் சந்தை' -சுருக்கமான அறிமுகம் தொடர்பான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இல.17, விவசாய சேவை ஒழுங்கை பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பொறியியலாளர் குலசேகரம் சிறிதரன் கருத்துரை வழங்குவார். இந்தக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## மானிப்பாய் இந்துவின் மாணவர் ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடலும்மதிய விருந்தும் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் அ.கெங்காதரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உதவி அதிபர் பெ.வசந்தனும் கலந்து கொள்வர்.

தலைமையுரையை யு. டிசாந்தனும், கனிவுடன் எழுக என்னும் தலைப்பில் உரையை கல்லூரி முதல்வர் எம்.இந்திரபாலாவும், தோழமை பெருக என்னும் தலைப்பில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி கொலேசியா டேவிட்டும், சீருற வாழ்க என்னும் தலைப்பில் சிறப்பு விருந்தினரும், கல்வியால் வளமுற என்னும் தலைப்பில் பிரதம விருந்தினரும் உரையாற்றவுள்ளனர். (ஐ-54)

## பொதுச் செயலாளர் பதவிக்கு ஐ.தே.கட்சிக்குள் கடும் போட்டி!

கொழும்பு, ஏப்.03

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்குக் கட்சிக்குள்ளே கடும் போட்டி நிலவி வருகின்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், அமைச்சர்களான சாகல ரட்நாயக்க மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரும் இந்தப் பதவிக்கான போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

இதனால் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டிச் சூழ்நிலை உருவாகியுள்ளது.

பொதுச் செயலாளர் பதவி தொடர்பாகக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


எனினும், அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தற்போது கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியை வகித்து வருகிறார். இந்தநிலையில், அவருக்கு பொதுச் செயலாளர் பதவி வழங்கப்படக் கூடிய சாத்தியம் அதிகளவில் உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான போட்டி நிலைமையானது கட்சியின் உள்ளக ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## விமலின் பிணை தொடர்பில் ஆராயவுள்ளார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.03

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவுக்குப் பிணை வழங்க முடியுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினவ உள்ளார் என்று ஜனாதிபதி அண்மையில் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.



விமல் வீரவன்ஸ அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்டுள்ளார் என்று கூட்டு எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன உள்ளிட்டவர்கள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து இது குறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட விமல் வீரவன்ஸ, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.-(ஐ)

## குற்றஞ்சாட்டப்பட்ட படை அதிகாரியை காப்பாற்ற கடற்படைத் தளபதி முயற்சி

**தமிழர்கள் இருவர் கடத்தப்பட்ட விவகாரம்**

கொழும்பு, ஏப். 03

போர் நிகழ்ந்த காலத்தில் கொட்டாஞ்சேனையில் இருந்து இரண்டு தமிழர்களைக் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள கடற்படை அதிகாரியைக் காப்பாற்ற கடற்படைத் தளபதி முயற்சிக்கிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆங்கில செய்தித்தாளில் இந்த செய்தி வெளியாகியுள்ளது.

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்கவின் உதவியுடன் இந்தக் கடத்தல் சம்பவம் இடம் பெற்றது என்று குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

2009 ஜனவரி 11 ஆம் திகதியன்று லோகநாதன் மற்றும் ரத்னசுவாமி ஆகிய இருவரும் வத்தளையில் வைத்து கடற்படையினரால் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட இரண்டு தமிழர்கள் பயணித்த வாகனத்தின் பாகங்கள் வெலிசற கடற்படை முகாமில் இருந்து மீட்கப்பட்டிருந்தன.

எனினும், கடத்தப்பட்ட லோகநாதனின் மனைவியிடம் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு அந்த நாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கவில்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்த இரண்டு தமிழர்களையும் கடத்திய கடற்படை அதிகாரியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் துறையினர் கடற்படைத்தளபதிக்கு கடிதம் அனுப்பியுள்ள போதிலும் அந்த அதிகாரி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பிளாஸ்ரிக் கழிவு

## இயற்கைச் சூழலின் மிகப்பெரும் எதிரி

**"மனிதர்களிடம் சாகாவரம் பெற்ற பிளாஸ்ரிக் கழிவுகள் மனிதர்களுக்குத் தருவது பாதி வயதில் சாகும் வரம்"**

பிளாஸ்ரிக் கழிவுகளை எரிக்கும்போது வெளியேறும் டையொக்சின் வாயு
புற்றுநோய்களையும் பிறப்புக் குறைபாடுகளையும்
மலட்டுத் தன்மையையும் ஏற்படுத்தும்



## பிளாஸ்ரிக் பைகளுக்கு விடை கொடுப்போம்!

## துணிப்பைகள், காகிதப்பைகளைக் கையில் எடுப்போம்!

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 20 மைக்குரோன்கள் அல்லது அதற்குக் குறைவான தடிப்புக்கொண்ட பிளாஸ்ரிக் பைகளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் 10.000 ரூபா தண்டப்பணம் அல்லது 2 வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளையும் சேர்த்து அனுபவிக்க நேரிடும்.

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

# இரட்டை இலைச் சின்னத்துக்காக மீண்டும் கையெழுத்து வேட்டை!

## சசிகலா, பன்னீர் அணிகள் போட்டா போட்டி



சென்னை, ஏப்.03

**இரட்டை இலை சின்னத்தை மீட்பதற்காகச் சசிகலா, பன்னீர்செல்வம் அணிகள், கட்சி நிர்வாகிகள், தொண்டர்களிடம் மீண்டும் கையெழுத்து வேட்டை நடத்தி, தேர்தல் ஆணையகத்திடம் பிரமாண பத்திரங்களை சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளன.**

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் சசிகலா அணி, பன்னீர்செல்வம் அணிகளாக, அ.தி.மு.க. பிரிந்துள்ளது. ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில், அதி.மு.க பெயரைப் பயன்படுத்த, இரு அணிகளுக்கும் தடைவிதித்த தேர்தல் ஆணையகம் அந்தக் கட்சியின் சின்னமான இரட்டை இலையையும் முடக்கியது.

தற்போது, தேர்தல் ஆணையகம் பன்னீர்செல்வம் அணியினருக்கும், சசிகலா அணியினருக்கும் அனுமதித்துள்ள கட்சியின் பெயர்களும், சின்னங்களும், ஆர்.கே. நகரில் நடக்கும் இடைத்தேர்தலுக்கு மட்டும் பொருந்தும். தேர்தல் முடிவடைந்ததும் எதிர்வரும் 17 ஆம் திகதி இரட்டை இலை சின்னம் தொடர்பில் ஆணையகத்திடம் விசாரணை நடத்தும் போது சின்னம், எந்த அணிக்கு ஒதுக்கப்படும் என்பது தெரிய வரும்.

இரட்டை இலைச் சின்னத்தை கைப்பற்ற, கட்சியினரின் கையெழுத்துகளை பிரமாண பத்திரங்களில் மீண்டும் பெற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இரு அணிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் ஆணையகத்திடம் இரட்டை இலைச் சின்னம் கேட்டு, பன்னீர்செல்வம் அணியில், 6 ஆயிரம் பிரமாணப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதில், அ.தி.மு.க. உறுப்பினர்களின் 43 லட்சம் பேரின் ஆதரவு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சசிகலா அணியில் இருந்து, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆயிரத்து 912 பேரின் ஆதரவும் சட்டசபை உறுப்பினர்கள் 122 பேர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 37 பேர் ஆகியோரின் ஆதரவும் இருப்பதாக, பிரமாணப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சமீபத்தில், தினகரன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம், கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் எடுத்த முடிவின்படி, ஒன்றியச் செயலர்கள் 385 பேர், நகராட்சிச் செயலர் 135பேர் , பேரூராட்சிச் செயலர்கள் 577, கிளைச் செயலர்கள் 65 ஆயிரம் பேர் ஆகியோரின் கீழ் பணியாற்றும் நிர்வாகிகளிடம், பிரமாணப் பத்திரத்தில் கையெழுத்துப் பெற்று, தேர்தல் ஆணையகத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஒப்படைக்குமாறு, தினகரன் உத்தரவிட்டுள்ளார். அதே போல, பன்னீர் செல்வம் அணியினரும், ஒரு கோடி தொண்டர்களின் கையெழுத்தை, தேர்தல் ஆணையகத்திடம் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

ஏற்கனவே பெறப்பட்டுள்ள, 43 லட்சம் பேரின் கையெழுத்துப் போக, மீதமுள்ள, 60 லட்சம் பேரிடம் கையெழுத்துக்களை பெற்று, தேர்தல் ஆணையகத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது. இவ்வாறு, இரு அணிகளும் கட்சியினரிடம் கையெழுத்து வேட்டை நடத்தி, பிரமாண பத்திரங்களை, தேர்தல் ஆணையகத்திடம் தாக்கல் செய்த பின் இரட்டை இலை யாருக்கு என்பது தெரிய வரும். (எ)

## பசுவைக் கொல்வோர் தூக்கில் போடப்படுவர்



சதீஸ்கர் மாநில முதல்வர் அதிரடி

பசுவைக் கொல்பவர்கள் தூக்கில் போடப்படுவார்கள் என்று சதீஸ்கர் மாநில முதல்வர் ராமன் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்றதும் அனுமதி இன்றி செயற்பட்டு வந்த இறைச்சிக் கடைகளுக்கும், இறைச்சி வெட்டும் கூடங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சதீஸ்கர் மாநில முதல்வர் ராமன் சிங், பசுவைக் கொன்றால் தூக்கில் போடுவேன் என்று தெரிவித்துள்ளார்.

ராய்ப்பூரில் பசுவதைக்கு எதிராக சட்டம் கொண்டு வரப்படுமா என்று செய்தியாளர்களால் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்பு குஜராத் மாநிலத்திலும் பசுக்களைக் கொல்பவர்களுக்கு 7 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படுவதுடன் ஒரு லட்சம் ரூபா வரை அபராதமும் விதிக்கப்படும் என்று அந்த மாநிலத்தில் விலங்குகளைப் பாதுகாக்கும் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இந்தியா-மலேஷியா இடையே கைச்சாத்தாகின 7 ஒப்பந்தங்கள்



டில்லி, ஏப்.03

இந்திய பிரதமர் மோடி மற்றும் மலேஷியப் பிரதமர் நஜீப் ரஸாக் ஆகியோர் முன்னிலையில் இரு நாடுகளுக்கிடையே பல்வேறு துறைகளில் 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

6 நாள்கள் சுற்றுப் பயணமாக கடந்த 30ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட மலேஷியப் பிரதமர் நஜீப்ரஸாக், டில்லி-ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டு கல்வி, விமானச் சேவை, விளையாட்டு உள்ளிட்ட பல துறைகள் தொடர்பாக 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அதைத் தொடர்ந்து, பிரதமர் மோடியும், மலேஷிய பிரதமர் நஜீப்பும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது கருத்துத் தெரிவித்த மோடி-

'இரு நாடுகளுக்கும் பொதுவான பல்வேறு சவால்களையும், பிரச்சினைகளையும் திறம்பட எதிர்கொள்வதற்காக, இரு தரப்பு ஒத்துழைப்பையும், வர்த்தக தொடர்புகளையும் மேலும் வலுப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார வளமை, நிலைத்தன்மை ஆகியவற்றைப் பராமரிப்பதில் இரு நாடுகளுக்கும் பெரும் பங்கு உள்ளது' என்று தெரிவித்தார். இதே வேளை நஜீப் ரஸாக் கூறுகையில், 'பாதுகாப்பு உட்பட பல்வேறு துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும்' என்று குறிப்பிட்டார். (எ)

## சந்திரபாபு நாயுடுவுக்கு சர்வதேச விருது



ஆந்திராவின் புதிய தலைநகரை உருவாக்குவதில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு சர்வதேச விருது வழங்கப்படவுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி இவ் விருது வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க இந்திய வர்த்தகப் பேரவை அறிவித்துள்ளது. இதையொட்டி சந்திரபாபு நாயுடு எதிர்வரும் 7 ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார் என்று அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது. (எ)

## நீதித்துறையில் தொழில்நுட்பம்; அதிகரிக்க மோடி வலியுறுத்து

டில்லி, ஏப்.03

இந்தியாவில் நீதி வழங்குவதை மேம்படுத்த நீதித்துறையில் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திறமையாக நீதி வழங்குவதில், தொழில்நுட்பம் பெரும்பங்கு வகிக்கும். நமது சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவை நினைவாக்கவும், புது இந்தியா உருவாக்கவும், திறமையான நீதி முக்கியமானது.

கடந்த காலங்களில் வழக்கறிஞர்கள், வழக்குகளில் நீதிமன்றங்களில் வாதாட, அது குறித்த முந்தைய தீர்ப்புகள் மற்றும் ஆதாரங்களை பல்வேறு புத்தகங்களில் தேடினர். தற்போது, வழக்கறிஞர்கள் கூகுள் இணையத்தளத்தில் தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெறுகின்றனர். இது நீதிமன்றங்களில் அவர்களின் வாதாடும் திறனை அதிகரித்துள்ளது. நீதிபதிகளின் பணி எளிதாகியுள்ளது.

தாங்கள் விசாரணை நடத்தும் வழக்குகள் தொடர்பாக நீதிமன்றங்களுக்கு பொலிஸார் வரும் போது, அந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு சிரமங்களை ஏற்படுத்துகிறது. இதனைத் தவிர்க்க வழக்குகள் ஒத்தி வைக்கப்படுவது குறித்து குறுஞ்செய்தி மூலம் தகவல் தெரிவிக்கலாம். இதற்கு தொழில்நுட்பம் பெரிதும் பயன்படுத்தப்படும் - என்றார். (எ)

## ஆசியாவின் மிகப் பெரிய 'துலிப்' மலர்த்தோட்டம் மக்கள் பார்வைக்கு

காஷ்மீர், ஏப்.03

ஆசியாவின் மிகப் பெரிய துலிப் மலர்கள் தோட்டம் பொதுமக்கள் பார்வைக்காக ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

15 நாள்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் தோட்டத்துக்கு வெளியே உணவுகள் அரங்கம், கைவினைப் பொருள்கள் அரங்கம் ஆகியவை காஷ்மீர் பாரம்பரியத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் உலகின் தலை சிறந்த உருது கவிஞர்களும் இந்த விழாவில் பங்குபெறுவர்கள் என்று கூறப்படுகின்றது.

மேலும் இந்த வருடம் துலிப் மலர்கள் தோட்டத்தைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 5 லட்சத்தைத் தாண்டும் என்று காஷ்மீர் சுற்றுலாத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஆசியாவின் மிகப் பெரிய துலிப் தோட்டம் தால் ஏரி அருகில் அமைந்துள்ளது. இதில் 46 வகையைச் சேர்ந்த 20 லட்சம் மலர்ச் செடிகள் அங்கு பராமரிக்கப்படுகின்றன. (எ)

## 24 பேருடன் பயணித்த சரக்குக் கப்பல் மாயம்!



கப்பல் பணியாளர்கள் 24 பேருடன் பயணித்த தென்கொரிய சரக்குக் கப்பல் ஒன்று காணாமற் போயுள்ளது.

தென் அட்லாண்டிக் பகுதியில் இறுதியாக கப்பலின் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கப்பலைத் தேடும் பணியில் பிரேசில் மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றன.

கப்பலைத் தேடும் பணி மும்முரமாக இடம்பெற்று வருகின்ற நிலையில் கப்பலில் பயணித்திருந்த இரு பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கப்பலில் 8 கொரியர்களும் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் 16 பேரும் இருந்துள்ளனர்.

இருவர் மீட்கப்பட்டுள்ளனர். எனினும், ஏனையோரைக் காணவில்லை என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

# கொலம்பியாவில் மோசமான மண்சரிவு:

# நிலத்தில் புதையுண்டு 254 பேர் உயிரிழப்பு!



கன மழையை அடுத்து வெள்ளப்பெருக்கும்!!



போகோட்டா, ஏப்.03

கொலம்பியாவின் தென்மேற்குப் பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 254 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்காக கண்டத்தில் உள்ள நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் உள்ள புடுமேயோ மாகாணத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக அந்தப் பகுதியில் உள்ள ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், ஆற்றங்கரைகளின் ஓரம் பொது மக்கள் வசிப்பிடங்களில் நேற்று முன்தினம் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால் சுற்றுப்புறப் பகுதிகள் அனைத்தும் நிலச்சரிவில் புதைந்தன. மோசமான வானிலை மற்றும் கட்டமைப்பு வசதிகளால், மீட்புப் பணிகள் தடைப்பட்டுள்ளன என்று மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் மீட்புப் பணியினால் மீட்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஆற்றின் கரைகள் உடையும் அபாய நிலை தொடர்வதால் முன்னரே மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதனால் பலர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட்டனர். இல்லாவிட்டால் மேலும் உயிரிழப்புகள் அதிகமாயிருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

காணாமற்போயுள்ள 200 இற்கும் அதிகமானவர்களை தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இந்த மாகாணத்தில் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வெள்ளம் ஏற்பட்ட பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அந்த நாட்டு பிரதமர் ஜூவன் மானுவல் சான்டோஸ், ''பேரிடர் நிவாரணப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு குடியமர்த்தப்பட்டுள்ளனர்'' என்று தெரிவித்துள்ளார்.

# மயக்க மருந்து கொடுத்து 20 பேர் கொடூரக்கொலை!



பாகிஸ்தானிலுள்ள தர்காவில் அரங்கேறிய கோரச் சம்பவம்

டாக்கா, ஏப்.03

பாகிஸ்தானில் உள்ள தர்கா காப்பகத்தின் நிர்வாகி ஒருவர், 20 பேருக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்களைக் கொடூரமாக வெட்டியும், தாக்கியும் கொலை செய்துள்ளார்.

மேலும், நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கொடூர தாக்குதலில் உயிர் தப்பிய 4 பேர் அண்மையில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பஞ்சாப் மாகாண சர்கோதா மாவட்டத்தில் லக்கர் நகரில் இருந்து, சுமார் 200 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முகம்மது அலி குஜ்ஜார் தர்காவிலேயே இந்தக் கோர சம்பவம் அரங்கேறியுள்ளது.


அந்தத் தர்காவின் காப்பாளரான அப்துல் வஹீத் எனப்படுபவர் சமீப காலமாக மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து வந்துள்ளார். அவரது ஆலோசனையின் பேரில் உதவியாளர்கள் சிலர் அங்கு வசித்து வந்த எதிர்த்தரப்பினருக்கு மயக்க மருந்து கலந்த உணவு வகைகளை கொடுத்துள்ளனர்.

அதன்பின் அவர்கள் மயங்கிச் சாய்ந்தபோது அவர்களைக் கத்தி மற்றும் கதைத் தடிகளுடன் கொண்டு கொலை வெறித் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் சிகிச்சைக்காக அந்தத் தர்காவுக்கு வந்திருந்த மூன்று பெண்கள் உட்பட 20 பேர் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தனர்.

மனநிலை பாதிப்புடன் அங்கு செல்லும் பக்தர்களுக்கு பேய் விரட்டுவதாகவும், பாதுகாப்பளிப்பதாகவும் கூறப்படும் இந்த தர்காவின் நிர்வாகத்தை யார் கவனிப்பது? என்பது தொடர்பாக பாமர வாரிசுகளுக்கு இடையில் சமீப காலமாக போட்டியும் மோதலும் இருந்து வந்துள்ளது. இந்தப் போட்டியின் விளைவாகவே கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த கோர சம்பவம் தொடர்பாக 5 பேரை கைது செய்துள்ள பொலிஸார் மேலும் பலரைத் தேடி வருகின்றனர். (எ)

## இந்தோனேஷியாவில் நிலச்சரிவு: நிலத்தில் புதையுண்டு 11 பேர் சாவு!



ஜகார்த்தா, ஏப்.03

இந்தோனேஷியாவின் ஜாவா தீவின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில், 11 பேர் உயிருடன் மண்ணில் புதைந்து உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொனோரோகோ என்ற இடத்திலுள்ள இஞ்சிக் கொல்லையில், கூலித் தொழிலாளர்கள் பதியங்களில் இருந்து இஞ்சியைத் தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பேரிடர் மீட்புப் படையினர் சிலரை உயிருடன் மீட்டனர்.

மண் தோண்டும் பெரிய இயந்திரங்களின் உதவியுடன் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் நிலச்சரிவின் போது சுமார் 30 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# ஆஸி.தொடரில் கோஹ்லி அதிகஆக்ரோஷம்; ஓட்டங்கள் குறையக் காரணம் அதுவே!

## கங்குலி கூறுகிறார்

''ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அளவுக்கு அதிகமாக கோஹ்லி உணர்ச்சி வசப்பட்டார். இதனால்தான் ஓட்டங்களைக் குவிக்க முடிய வில்லை. களத்தில் 'கூலாக' செயல்பட்டால் மீண்டும் ஓட்ட மழைபொழியலாம்'' என, கங்குலி தெரிவித்தார்.

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி (வயது -28). இந்திய அணிக்குத் தொடர்ந்து 7 டெஸ்ட் தொடரில் வெற்றிகளைக் கைப்பற்றி தந்துள்ளார்.

ஆக்ரோஷமான செயல்பாட்டின் மூலம், சக வீரர்களுக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறார். தொடர்ந்து 4 டெஸ்ட் தொடரில் இரட்டைச் சதம் அடித்த ஒரே வீரர் இவர்தான். இப்படி அசத்தல் 'பார்மில்' இருந்த இவர், சமீபத்திய ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் (3 போட்டிகளில் 46 ஓட்டங்களுடன் ) தடுமாறினார்.

இது குறித்து இந்திய முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியவை வருமாறு:-


என்னைப் பொறுத்தவரை கோஹ்லியை துடுப்பாட்ட வீரர், அணித் தலைவர் என இரண்டு விதமாக பிரித்துப் பார்க்கிறேன். துடுப்பாட்டம் என்ற அடிப்படையில், உலக அரங்கில் சிறந்து விளங்குகிறார். அணித் தலைவராக இருப்பதால் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற விரும்புகிறார். இது, எல்லாச் சூழ்நிலையிலும் சாத்தியம் இல்லை.

### இதுவே காரணம்

ஓர் அணித் தலைவராக ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரிலும் வெற்றிக் கிண்ணம் வெல்ல எண்ணி இருப்பார். இதனால் அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டார். இதுதான், இவரின் துடுப்பாட்டத்தைப் பாதித்து, ஓட்டம் குவிக்க முடியாமல் போனதற்கு காரணம். இதை, கோஹ்லி ஒரு பாடமாக நினைத்துக் கற்றுக்கொள்ள வேண்டும். வரும் போட்டிகளில் 'கூலாக' செயல்பட்டால், மீண்டும் ஓட்ட மழை பொழியவாய்ப்பு உள்ளது.

### புஜாரா அபாரம்

புஜாராவின் துடுப்பாட்டம் அபாரமாக இருந்தது. கடந்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் இவரை நீக்கினர். இதற்கு அப்போதே எனது எதிர்ப்பை வெளிப்படுத்தினேன். இந்தப் பருவ காலத்தில் 13 டெஸ்டில் 1316 ஓட்டங்கள் குவித்துள்ள இவர், அந்நிய மண்ணிலும் அசத்துவார்.



### உமேஷ் அசத்தல்

தர்மசாலா டெஸ்டின் மூன்றாவது நாள் ஆட்டத்தின் உணவு இடைவேளைக்குப் பின், ஆஸ்திரேலிய 2ஆவது இன்னிங்ஸைத் தொடக்கியது. இந்த ஆடுகளம் இந்தியாவை விட ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாக இருந்தது. ஆனால், அடுத்த ஒரு மணி நேரத்தில் இந்திய வேகப்பந்துவீச்சாளர்கள் உமேஷ்குமார், புவனேஷ்வர் துடுப்பாகப் பந்து வீசி வெற்றிக்கு வித்திட்டனர்.

### சுழல் பங்களிப்பு

இந்த வெற்றிக்கு இந்தியப் பயிற்சியாளர் கும்ளே முக்கியக் காரணம். முடிவுகளைத் துல்லியமாக எடுப்பவராக திகழ்கிறார். இந்திய மண்ணைத் தாண்டி வெளிநாட்டிலும் வெற்றி பெற எண்ணுகிறார்.

இதற்கு, இந்திய 'சுழல்' வீரர்களின் பங்களிப்புக் கட்டாயம் தேவை. தற்போதைய இந்திய அணியின் டெஸ்ட் செயற்பாட்டை பார்க்கும்போது வியப்பாக உள்ளது. உலகின் எந்தப்பகுதியிலும் வெற்றி பெறும் அளவில் இந்திய அணி சிறப்பாக காணப்படுகிறது.- இவ்வாறு கங்குலி தெரிவித்தார்.

# ஜேர்மனியில் உசைன் போல்ட் பிரபல அழகியுடன் உல்லாசம்

ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதங்களைக் குவித்த உசைன் போல்ட் ஜேர்மனி நாட்டில் பிரபல அழகியுடன் உல்லாசமாக இருந்த படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

2016ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் ஜமைக்கா நாட்டை சேர்ந்த உசைன் போல்ட் தங்கப்பதக்கங்களைக் குவித்து உலகளவில் பிரபலமானார்.

இந்நிலையில், ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த பிரபல மொடல் அழகியான Holly Young(வயது -23)என்பவருடன் தனது உல்லாசப் பயணத்தை உசைன் போல்ட் தொடங்கியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் இருந்து புறப்பட்ட இருவரும் ஜேர்மனிக்கு சில நாள்களுக்கு முன்னர் சென்றுள்ளனர்.

ஜேர்மனியில் உள்ள முனிச் நகரில் இருவரும் 4 நாள்களாக தங்கியிருந்தனர் என்றும், விடுமுறையை இருவரும் உல்லாசமாக கழித்தனர்



என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உசைன் போல்ட்டுடன் இருக்கும் புகைப்படங்களை மொடல் அழகி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இணையத்தளத்தில் வெளியாகியுள்ள இப்படங்கள் தற்போது வைரலாகப் பரவி வருகின்றன.

# ராகுல், அஸ்வின் விலகல்: ஐ.பி.எல். தொடரில் பின்னடைவு!

ஐ.பி.எல்., தொடரிலிருந்து இந்தியாவின் லோகேஷ் ராகுல், அஸ்வின் விலகி உள்ளனர். முரளி விஜய், ஜடேஜா பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.

ஐ.பி.எல்., தொடரின் 10 வது 'சீசன்' புதனன்று தொடங்குகிறது. இதில் காயத்தால் விலகும் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்திய டெஸ்ட் அணித் தொடக்க வீரர் லோகேஷ் ராகுல், (வயது 24), சமீபத்திய, ஆஸ்திரேலிய தொடரின் முதல் போட்டியில் இடது தோளில் வலி ஏற்பட்டு உபாதைக்கு உள்ளானார். இதைப் பொருட்படுத்தாமல், கடந்த 5 வாரங்களாகத் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்றார். இத்தொடரில் 6 அரைச்சதம் உட்பட, மொத்தம் 393 ஓட்டங்கள் (4 போட்டிகள்) குவித்தார்.

### லண்டனுக்குப் பயணம்

இந்நிலையில், காயத்திற்காகச் சத்திர சிகிச்சை செய்வதற்காக லண்டன் செல்ல வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால், ஐ.பி.எல்., தொடரில், பெங்களூரு சார்பில் விளையாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.இது வரை, பெங்களூர் (2013, 16 417 ஓட்டங்கள்) மற்றும் ஐதராபாத் (2014,15 308 ஓட்டங்கள்) அணிகள் சார்பில் முறையே 19, 20 போட்டிகளில் விளையாடி உள்ளார்.

### பின்னடைவு

ஏற்கனவே அணித் தலைவர் கோஹ்லி, வலது தோள்பட்டை காயத்தால் தொடரின் சில போட்டிகளில் களமிறங்க முடியாத நிலையில், ராகுலும் விலகுகின்றமை பெங்களூர் அணிக்குச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. கோஹ்லி இல்லாதபட்சத்தில், தென் ஆபிரிக்காவின் டிவில்லியர்ஸ் அணியை வழிநடத்துவார் எனத் தெரிகிறது.

### அஸ்வின் விலகல்

இதே போல, இந்திய அணி 'சுழல்' வீரர் அஸ்வினும், (வயது-30) ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். தமிழகத்தைச் சேர்ந்த இவர், அதிவேகமாக 250 டெஸ்ட் விக்கெட்டை (45 போட்டிகளில்) வீழ்த்திய பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றவர். சமீபத்திய, ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் 4 போட்டிகளில் 21 விக்கெட்டை வீழ்த்தினார். ஐ.பி.எல். தொடரிலும் அசத்தும் இவர், முதல் 8 'சீசனில்' சென்னை அணியில் விளையாடினார்.

### ஹெர்னியா பாதிப்பு

பின், சூதாட்டப்புகார் காரணமாக சென்னை அணி நீக்கப்பட, புனே அணியில் இணைந்தார். இதுவரை, இத்தொடரில் 111 போட்டிகளில் 100 விக்கெட்டை வீழ்த்தியுள்ளார்.

இந்திய அணிக்காகத் தொடர்ந்து போட்டிகளில் விளையாடி வருவதால், அவருக்கு 'ஸ்போர்ட்ஸ் ஹெர்னியா' ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதிலிருந்து மீள 6 முதல் 8 வாரம் தேவைப்படலாம். இதனால், 10ஆவது ஐ.பி.எல்., தொடரிலிருந்து விலகினார். வரும் ஜூனின் முதலாம் திகதி இங்கிலாந்தில் தொடங்கவுள்ள சம்பியன்ஸ் டிராபியில் பங்கேற்க இந்த ஓய்வைப் பயன்படுத்த உள்ளார்.

### சந்தேகத்தில் விஜய்

மற்றொரு இந்திய வீரரான முரளி விஜயும், ( வயது32), காயத்தால் (மணிக்கட்டு, தோள்பட்டை) அவதிப்படுகிறார். இதனால், இம்முறை பஞ்சாப் சார்பில் அவர் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கின்றமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப்பட்டியலில், இந்திய 'சுழல்' வீரர் ஜடேஜா (குஜராத்), வேகப் பந்துவீச்சாளர் உமேஷ் யாதவ்(கொல்கத்தா) இணையலாம் எனக் கூறப்படுகிறது. இவர்கள் இருவரும் இந்தியாவுக்காகத் தொடர்ச்சியாகப் போட்டிகளில் விளையாடி வருகின்றமையால் ஓய்வு எடுக்க விரும்புகின்றனர்.

இதன் மூலம், சம்பியன்ஸ் டிராபியில் புத்துணர்ச்சியுடன் களமிறங்க திட்டமிட்டுள்ளனர். இப்படி அடுத்தடுத்து வீரர்கள் விலகுகின்றமை, ஐ.பி.எல். தொடருக்கு பின்னடைவாக அமைந்துள்ளது.

## நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம் விடுவிப்பதாகத் தெரிவித்துள்ள 217 ஏக்கர் காணிகளில் முதலில் விடுவிக்கப்படுமெனத் தெரிவித்துள்ள 31 ஏக்கர் காணி, போராட்டம் நடத்தும் மக்களுக்குச் சொந்தமானதல்ல.

அரசாங்கம் இதுபோன்ற ஏமாற்று வேலைகளில் ஈடுபடாது போராட்டத்தை முன்னெடுக்கும் 138 குடும்பங்களுக்கும் உரித்தான காணிகளை உடனடியாக மீண்டும் ஒப்படைக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

கேப்பாபிலவில் இராணுவம் பலாத்காரமாக வைத்துள்ள எமது காணிக்குச் செல்லும் வீதிக்கு இரு மருங்கிலுமே நாங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தும் நடத்தி வருகிறோம். எமது போராட்டத்தைக் குழப்பும் வகையில் வீதிப் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகச் சுற்றாடல் பாதிக்கப்பட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பலருக்கு மூச்சுத்திணறல் போன்ற நோய்கள் ஏற்பட்டுள்ளன.

எது, எப்படியிருப்பினும் நாம் எமது காணிக்குள் காலடி எடுத்து வைக்கும் வரை எமது போராட்டம் தொடரும். - இவ்வாறு கூறினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள்.

அத்துடன் த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கடந்த வாரம் நாம் போராட்டம் நடத்தும் இடத்திற்கு வந்து எம்முடன் கலந்துரையாடினர். ஆனால், அவர்கள் போராட்டத்தைக் கைவிடும்படி எம்மிடம் கோரிக்கை விடுக்கவில்லை. அரசு இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் தாமும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகின்றார் என மாவை சேனாதிராசா தெரிவித்தார். - எனவும் அவர்கள் கூறினர். (உ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் அழைப்பை ஏற்றே மத்திய சுகாதார அமைச்சர் அங்கு சென்றார் எனக் கூறப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் 38ஆவது நாளாகவும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் வடக்கிற்கு இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள மத்திய சுகாதார அமைச்சர் வவுனியாவில் இரத்த வங்கி மற்றும் மாமடுவில் சிறுநீரக நோய்ச் சிகிச்சை நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைத்ததன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்ட இடத்துக்குச் சென்றார்.

சுகாதார அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் உட்படப் பலரும் அங்கு வருகை தந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோரின் கருத்துக்களைச் செவிமடுத்த அமைச்சர் இது தொடர்பாகத் தான் கவனம் செலுத்துவார் என உறுதியளித்தார். (உ-100)

## பொன்னாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னாலையில் இருந்து கடற்படையினர் நன்னீரை எடுத்துச் செல்கின்ற விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து நேற்று நேரடியாக அங்கு சென்ற அவர் கடற்படையினர் நன்னீர் எடுத்துச் செல்லும் இடத்தைப் பார்வையிட்டார். சுழிபுரம் சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியுடனேயே அந்த விடயம் தொடர்பாகப் பேச வேண்டும் என அங்குள்ள கடற்படையினர் தெரிவித்தனர். இதையடுத்து அது தொடர்பான விவரங்களையும் அவர் கடற்படையினரிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

பொன்னாலையில் பெரிய குளத்திற்கு சமீபமாக நன்னீர் வளம் உள்ளதை அறிந்த கடற்படையினர் கடந்த 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அங்கு நிலம் ஒன்றை விலை கொடுத்து வாங்கி அதில் பாரிய கிணறு வெட்டி, அப்போது தாங்கள் இருந்த காரைநகர் கடற்படைத் தளத்திற்கு நன்னீர் எடுத்துச் சென்றனர். யுத்தம் தொடங்கிய பின்னர் அது நிறுத்தப்பட்டிருந்தது.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொன்னாலை, சுழிபுரம் போன்ற இடங்களில் தங்கியிருந்த கடற்படையினர் தங்களுக்குத் தேவையான நன்னீரை மேற்படி கிணற்றில் இருந்து பெற்றுக்கொண்டனர்.

தற்போது, சுழிபுரம் சம்பில் துறையில் அவர்கள் அமைத்துள்ள கடற்படை முகாம், விகாரை, தோட்டம் போன்றவற்றுக்குத் தினமும் 40 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 60 ஆயிரம் லீற்றர் வரையான நீர் எடுத்துச் செல்லப்படுகின்றது.

இதனால், ஏற்கனவே வரண்ட பூமியான பொன்னாலையில் விரைவில் நன்னீர் வளம் அற்றுப்போகும் எனக் கூறுகின்ற மக்கள் தற்போது நன்னீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கின்றனர். இதனால் கடற்படையினர் அங்கிருந்து நீர் எடுப்பதை தடுத்து நிறுத்துமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அண்மையில் பொன்னாலைக்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடமும் பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தது.

இந்த நிலையிலேயே மேற்படி விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. நேற்று அங்கு சென்று நிலைமைகளை அவதானித்த அவர் அங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் மக்களுடனும் கலந்துரையாடினார். பொன்னாலையின் நன்னீரைப் பாதுகாப்பதற்குத் தான் விரைவாக உரிய நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் அவர் அங்கு உறுதியளித்தார்.

இதேவேளை, பொன்னாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும் என அங்குள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையையும் அவர் ஏற்றுக்கொண்டார். மக்களின் சுகாதாரம், போக்குவரத்து, உள்ளகக் கட்டுமானங்கள், வீட்டுத்திட்டங்கள், வாழ்வாதாரம் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்துவார் எனவும் அவர் மக்களுக்கு உறுதியளித்தார். (ஜ)

# அரசைக் கவிழ்க்கும் நாள் வெகு தொலைவில் இல்லை

## நம்பிக்கையோடு கூறுகிறார் மஹிந்த



கொழும்பு, ஏப்.03

நல்லாட்சி அரசாங்கம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. எனவே, அரசைக் கவிழ்க்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெஹிவளைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ள போல் இந்த வருடத்திற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை கவிழ்க்கப் போவதாக மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே கூறியிருந்தார்.

ஆனால், அவரது கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தின் பதவிக்காலம் முடியும் வரை எவராலும் நல்லாட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது. அதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பாடசாலை மாணவி துஷ்பிரயோகம் அதே பாடசாலை மாணவன் கைது

## வவுனியா மாமடுவில் சம்பவம்

வவுனியா, ஏப்.03

வவுனியாவில் பிரபல பாடசாலையொன்றின் 17 வயது மாணவி ஒருவரை அதே பாடசாலையில் கல்வி கற்கும் 18 வயதுடைய மாணவன் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இதன்போது மார்ச் மாதம் 31 ஆம் திகதி இரவு குறித்த பாடசாலையின் நிகழ்வு ஒன்று வவுனியா மாமடு பிரதேசத்தில் இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள் அங்கு சென்றிருந்தனர். அதன்போதே பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மாணவன் அந்த மாணவியுடன் நீண்ட நாள்களாக நட்புறவில் பழகி வந்தார் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மாணவனைக் கைது செய்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணை முடிவில் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் கூறினர். (ப-10)

## வட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இடம்பெயர்ந்து முகாம்களிலிருந்து தமது சொந்தக் காணிகளுக்குத் திரும்பும் மக்களுக்கு அரசாங்கம் வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை கப்பல் துறையில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேசசெயலாளர் பிரிவில் 5 வருடங்களுக்குள் திருமணம் செய்த மூவினங்களையும் சேர்ந்த 24 பேர் இந்தத் திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 20 பேர்ச் காணியும் வீடு அமைப்பதற்கு 5 லட்சம் ரூபாவும் இலகு தவணைக்கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ இத்திட்டத்துக்கான பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து அடிக்கல்லையும் நாட்டி வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், கிழக்கு மாகாணக் காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் ஆகியோரும் கலந்து கொண்டு அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

அத்துடன் நிர்மாணத்துறை பயிற்சி பெற்ற 80 பேருக்கு உபகரணங்களும் அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் வழங்கப்பட்டன. (ஜ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மக்களும் முசலிப் பிரதேச முஸ்லிம் மக்களும் தங்கள் பூர்வீகக் காணிகளைக் கடற்படையினரும், அரசும் ஆக்கிரமித்துள்ளமையைக் கண்டித்துத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவற்றை நேரடியாகப் பார்வையிட்டு, இம்மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்து, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன், மாவை சேனாதிராசாவை நேரடியாக சம்பவ இடத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை அழைத்து வந்தார்.

இவர்களுடன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாறூக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களை மாவை சேனாதிராசா சந்தித்தபொழுது கருத்துத் தெரிவிக்கையில் -

"நீண்ட நாள்களாகத் தங்கள் நிலத்தை விடுவிக்க வேண்டும் எனவும், அதில் தாங்கள் மீண்டும் குடியேற வேண்டும் எனவும் போராடிக் கொண்டிருக்கின்றனர் முள்ளிக்குள மக்கள். அம்மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கடற்படையினர் பிடித்து வைத்துக் கொண்டுள்ளனர்.

போர் முடிந்து எட்டு, ஒன்பது ஆண்டுகள் முடிவுற்றபோதும் கூட இவர்களின் இந்தப் பூர்வீகக் காணிகளைக் கடற்படையினர் பிடித்து வைத்திருப்பதில் எந்த வித நியாயமுமில்லை.

ஆகவே, இந்த மக்களின் நீதிக்கான, நியாயமான போராட்டங்களுக்கு நானும் அவர்களுக்கு ஆதரவு வழங்கி அவர்களுக்காகக் குரல் கொடுக்கவே இங்கு வந்திருக்கின்றேன்.

எங்களுடைய நாடாளுமன்றக் குழு - அதன் தலைவராக இருக்கின்றவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தனுடன் இணைந்து - முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினை - அடுத்து இதற்கு அருகிலுள்ள முஸ்லிம் மக்கள் அதாவது, விலத்து மக்களின் பிரச்சினை - ஆகியவற்றை நாங்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்து விடுவிப்பதற்காக நிச்சயமாகக் குரல் கொடுப்போம்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பெரியளவில் போராட வேண்டுமானால் அதையும் செய்வோம். ஜனாதிபதி, பிரதமர் இக் காணிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களுடன் நாங்கள் பேச்சு நடத்தி இவற்றை விடுவிக்கப் பாடுபடுவோம்.

முள்ளிக்குளம் மக்களோடு அரசியல் ரீதியாக வேலை செய்பவர்களான முஸ்லிம் தலைவர்களும் இங்கு கலந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கும் இங்கு பிரச்சினைகள் தற்பொழுது தலைதூக்கியுள்ளன. இவர்களுடைய விலத்துவ பூர்வீகக் காணிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையேற்பதற்கு அரச நடவடிக்கை எடுத்துள்ளது.

அவர்களுடைய குடியிருப்புக் காணி, பண்ணைகள், குளங்கள் எல்லாம் அவர்களை விட்டு கைநழுவி இருக்கின்றன என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தமிழ் மக்களின் போராட்டம் போன்று முஸ்லிம் மக்களுக்கும் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆகவே, தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இந்த நில விடுவிப்பு போராட்டத்தில் நிச்சயமாக ஒன்றிணைந்து போராட வேண்டிய நிலை உருவாகிவிட்டது. நாங்கள் இருசாராரும் ஒன்றிணைந்து, தமிழ் - முஸ்லிம் மக்கள் என்ற வேறுபாடற்ற நிலையில் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்க நிச்சயமாக ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம் என்றார். (ட-112)

## இரத்தினக்கல் சுரங்க விபத்தில் இருவர் பலி!

இரத்தினபுரி, ஏப்.03

குருவிற்ற - தெப்பநாவ பகுதியிலுள்ள இரத்தினக்கல் தோண்டும் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், அந்தச் சுரங்கத்தில் பணியாற்றிய ஊழியர்கள் இருவரே படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை உயிரிழந்துள்ளனர்.

இதன்போது உயிரிழந்துள்ளவர்களில் ஒருவர் எஹெலியகொட பகுதியைச் சேர்ந்தவராவார். உயிரிழந்த மற்றையநபர், தொடர்பான தகவல்கள் இது வரை தெரியவரவில்லையென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 'நெஞ்சுறுத்தும் நிஜங்கள்' நூல் வெளியீடு

சாவகச்சேரி,ஏப்.03

வயலூரானின் 'நெஞ்சுறுத்தும் நிஜங்கள்' நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு மாதுமை கல்வி நிலைய மண்டபத்தில் சி.சிவகாந்தன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபரும், தென்மராட்சி தமிழரசுக் கட்சித் தலைவருமான க.அருந்தவபாலனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணமும் கலந்து கொள்வர்.

ஆசியுரையை சிவஸ்ரீ செ.பரமானந்தக் குருக்களும், வெளியீட்டுரையை தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சிவ. முகுந்தனும், நூலின் ஆய்வுரையை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த. ஜெயசீலனும், வாழ்த்துக் கவியை தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் கவிஞர் த.நாகேஸ்வரனும் வழங்குவார்கள்.

நூலின் முதற்பிரதியை சாவகச்சேரி திருக்கணிதப் பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார். (இ-10)

## இணுவில் மத்திய கல்லூரி புதிய கட்டட திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.03

இணுவில் மத்திய கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரி முதல்வர் இ.துரைசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமாவதி செல்வின் இரேனியஸும் கலந்து கொள்வர்.

# அரசுக்கு சொந்தமானது முள்ளிக்குளம் கிராமம்



கடற்படை பேச்சாளர் சமிந்த வலாகுலுகே தெரிவிப்பு

மன்னார், ஏப்.03

மன்னார் - முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிக்குமாறு கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், அந்த கிராமம் அரசுக்குச் சொந்தமானது என்று கடற்படை பேச்சாளர் சமிந்த வலாகுலுகே தெரிவித்துள்ளார்.

எனினும், முள்ளிக்குளம் கிராம மக்களது போராட்டம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் என்றும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மன்னார் - முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்று 10 ஆவது நாளாக கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம், முள்ளிக்குளம் கிராம நுழைவாயிலில் இடம்பெற்றுவருகின்றது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் கடற்படையினருக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டால் மக்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி கடற்படையினரும் போராட வேண்டிய சூழல் ஏற்படும் என்று கடற்படை பேச்சாளர் எச்சரித்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர், கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தொலைவிலே கட்டடங்கள் அமைக்கலாம் என்ற சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், மக்கள் அதை பின்பற்றவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் இவ்வாறான தவறுகள் தொடர்பில் கடற்படையினர் முறையிடலாம் எனவும் கடற்படைப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## மின்தடை

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம் பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் நெடுங்குளத்திலிருந்து பதவியா வரை, பொகஸ்வேவ, மாமடு, சி.ஈ.ஸி. கல் உடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும்-

மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக்கண்டல், நிலாச்சேனை, வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பாமோட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், கள்ளாட்டி, பரப்புக்கடந்தான் ஆகிய இடங்களிலும், மின் தடை ஏற்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட ஆட்டையும் விடவில்லை திருடர்!

தென்மராட்சி, ஏப்.03

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் 2016 ஆம் ஆண்டு வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நல்லின ஆட்டையும் அதனுடன் நின்ற மற்றோர் ஆட்டையும் திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வரணி சிமிழ் அம்மன் கோவிலடியில அண்மையில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பிரதேச செயலகத்தால் கடந்த வருடம் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பெறுமதியான நல்லின ஆடு வழங்கப்பட்டது. இந்த ஆட்டைப் பெற்ற குடும்பம் இதனுடன் மற்றோர் ஆட்டை வாங்கி இரு ஆடுகளையும் வளர்த்து வந்தது. இந்த ஆடு சினைப்பட்ட நிலையில் இருந்த போதே திருட்டுப் போயுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-10)

## ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.03

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் காலைக்கதிருக்கு அனுப்பிவருகின்றனர்கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி

பி.எழிலினி 9ஏ, ச.மதுஹரி 9ஏ, கி.அபிராமி 7ஏ2பி, ர.கீர்த்தனா 7ஏபிசி, சா.பிரிந்தா 7ஏ2சி, க.அனுஷன் 7ஏபிஎஸ், க.மகிந்தா 7ஏசிஎஸ், த.கீர்த்தனா 6ஏ2பிஎஸ், இ.நித்தியாஜினி 6ஏபி2சி, ப.பவித்திரா 6ஏ2பி எஸ், க.மோகனப்பிரியா 6ஏ2பி எஸ், த.காயத்திரி 5ஏ3பிசி, த.திலக்சிகா 5ஏ 3பிசி, சி.ஜசிதா 5ஏ3பிசி, யோ.கோபிதாஸ் 5ஏ3பிஎஸ், த.மாதங்கி 4ஏ3பி 2சி, ச.சுகன்யா 4ஏ3பி2சி, செ.துளசிகா 4ஏ3பிசிஎஸ், மு.குபேந்தினி 4ஏ2சி 3எஸ், நா.நிஷாந்தன் 4ஏ2பி 2சி, பா.பானுஷா 4ஏபிசி2எஸ்,க.லேனுஜா 4ஏபிசி2எஸ்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி

வே.குருபரன் 8ஏ, யோ.கோபிகா 7ஏபிசி, தே.வேணுப்பிரியா 7ஏபிஎஸ், சி.சிவப்பிரியா 6ஏ2பி, செ.கீர்த்தனா 6ஏபிசி, செ.பிரசாந்தன் 6ஏசிஎஸ், ச.ஜீவதாஸ் 6ஏ2சி, ப.யாழினி 5ஏபி2சி

வரணி மத்திய கல்லூரி

கு.காந்திகா 8ஏபி, சி.சாருகா 6ஏ3பி, அ.அஜினா 5ஏ3பிசி, சி.சிந்துயன் 4ஏ2பிசி2எஸ், ர.சாதனா 3ஏ4சி2எஸ், பா.கார்த்திகா 3ஏ4பிசிஎஸ், ந.பாலகுமாரன் 2ஏ5பிசி, க.நிவேதன் 2ஏ4பிசிஎஸ், த.சதுர்சன் 2ஏ3பி 2சிஎஸ், ப.கோபிகா 2ஏ2பி 2சி2எஸ், ப.நசாங்கன் 2ஏ2பி 4சிஎஸ், நா.நிதர்சன் 2ஏ3பி2 சிஎஸ், வை.திவாகரன் 2ஏ பி4சிஎஸ், ப.நிந்தாஜினி 2ஏ 4சி2எஸ், அ.சுகன்யா 2ஏபி5சி, க.டிலானி 2ஏபி 2சி2எஸ்.

வரணி மகா வித்தியாலயம்

கு.கார்த்திகா - 8ஏபி, சி.சாருகா 6ஏ3பி, அ.அஜினா 5ஏ3பிசி, சி.விந்துஜன் 4ஏ2பிசி2எஸ், ர.சாதனா 3ஏ4சி2எஸ், பா.கார்த்திகா 3ஏ4பிசிஎஸ். (ஐ-10-21)

## நல்மனம் கொண்டவராய் சரியானதை செய்வோம்!

ஒருவர் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முன்வரும் போது, எம்முடைய முற்சார்பு எண்ணங்கள் அதனைச் சரியானது என்று ஏற்றுக் கொள்ளாது என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவர் இப்படித்தான். இவரால் இதனைச் செய்ய முடியாதே. எங்கே இவர் செய்து முடிக்கட்டும் பார்ப்போம் என்று நேர்மறையான எண்ணங்களை விடுத்து எதிர்மறையான எண்ணங்களை விதைத்து விடுபவர்களே அநேகம் பேராக, அன்றும் இருந்தார்கள் இன்றும் இருக்கின்றார்கள்.




நாம் ஆண்டவர் இயேசுவின் காலத்திலேயும் சட்டத்திலும் பழைமையிலும் ஊறிப் போனவர்கள் மனிதாபிமானத்தை விட சட்டத்துக்கே முதன்மை கொடுத்தார்கள். அதன்மூலம் தம்மைத் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், இஸ்ராயேல் மக்களை நெறிப்படுத்துபவர்களாகவும், நினைத்து ஏழைகள், பாவிகள், ஒதுக்கப்பட்டவர்கள் கடவுளால் சபிக்கப்பட்டவர்கள் என்றும் பெருமைப்பட்டுக்கொண்டார்கள். இப்படியான மனநிலையிலேயே விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்து அவரின் தீர்ப்பு எப்படி இருக்கும் அவர் மன்னித்தால் அவருடைய போதனைகள் பிழையானவை என்று அவரில் குற்றம் காட்டவே பெண்ணை அழைத்து வந்திருந்தார்கள். ஆனால், இயேசுவின் வார்த்தைகள் "உங்களுள் பாவம் இல்லாதவர் இப்பெண் மேல் கல் எறியட்டும்." (யோவான் 8:7) என்றவுடன் ஒருவர் பின் ஒருவராக அவ்விடத்தை விட்டு அனைவரும் சென்று விட்டார்கள். குற்றம் செய்யாதவர் எவருமில்லை. கடவுளும் கடவுள் அனுப்பியவருமே (கிறிஸ்து) பரிசுத்தர்.

பாவத்தினாலே பிறந்த மனிதர்கள், தம்மைவிட மற்றவர்கள் பாவிகள் என்று, தீர்ப்பிடுவதிலே முந்திக் கொள்கின்றார்கள். தன்னிடம் பாவம் இல்லை என்று கூறுபவன் பொய்யன் என்பதையும் இயேசு கூறிவைத்துள்ளார். நன்மை செய்ய முற்படும் பொழுது இறைவனின் துணை அவர்களை ஆட்கொள்ளுகின்றது. பொறாமையின் வெளிப்பாடே மற்றவர்களில் குற்றங்காணும் செயற்பாடாகும்.

நல்லவர்களாக வாழ்வது கடினம். நல்லவர்களுக்கும் சாத்தானுக்கும் இடையில் போட்டி நடைபெற்றுக் கொண்டே இருக்கும். உலகமானது பற்பல இன்பங்களைக் காட்டி மனிதர்களைத் தன்வசம் இழுத்து விடுகின்றது. உலகத்தின் மக்களாக அல்ல உண்மையின் மக்களாக வாழ்பவர்களே கடவுளின மக்கள் நன்மை செய்கின்றவர்கள் துன்பங்களை, எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கி விடாது. மனிதத்தை வாழ வைக்க, சரியானவற்றை செய்ய இறை துணையோடு முன்வந்து செயற்படும்போது, எதிர்ப்புகள் பலம் போல தோன்றினாலும் உண்மை, நீதியின் கரங்கள் வலுவடையும், பொதுநோக்கும், பிறர் நோக்கும் உள்ளவர்களாக ஒவ்வொருவரும் மாறிட, மன மாற்றமடைந்திட நாம் முன்வந்து செயற்படுவோம்!

அருட்பணி பீற்றர்,ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.

## இசைப் பாடல் இறுவட்டு, கைநூல் வெளியீட்டு விழா நிகழ்வு








புதிய நதியா நகைமாடம் பெருமையுடன் வழங்கிய மண்கும்பான் வெள்ளைப்புற்று அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் புகழ்பாடும், கவிஞர் வேலணையூர் சுரேஷின் இரண்டு படைப்புக்களான 'போக மறுத்த வீரகத்தி விநாயகர்', பாட்டாலே பரவசம்'(100 பாடல்கள்) ஆகிய இசைப் பாடல் இறுவட்டு, கைநூல் வெளியீட்டு விழா நேற்று மண்கும்பான் விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றமையும் பாடல் ஆசிரியர் கௌரவிக்கப்படுகின்றமையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தும் போராட்டங்கள் தொடர்கின்றன

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்கள் தொடர்பான உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு கோரி வடக்கு, கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் எவ்வித தீர்வுகளும் கிடைக்காத நிலையில் இன்றும் தொடர்கின்றன.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 42 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 38 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

மேலும், முல்லைத்தீவில் 26ஆவது நாளாகவும் மருதங்கேணியில் 19ஆவது நாளாகவும், கிழக்கில், திருகோணமலையில் 29ஆவது நாளாகவும் இப்போராட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன.

மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நாளாந்தம் பல்வேறு அமைப்பினர் ஆதரவு தெரிவித்து வருவதோடு, தென்னிலங்கைச் சமூகத்தினரும் அங்கு சென்று தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

எனினும், மாதங்களைக் கடந்து வீதியில் தமது உறவுகளுக்காகப் போராடும் தம் நிலை குறித்து அரசாங்கம் பாராமுகமாகச் செயற்பட்டு வருகின்றதென காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ)





